Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-25 | 09-01-2005 | ஞாயிற்றுக் கிழமை | ஓசை -326


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11118)

## சிறிலங்கா அரசின் ஊடகம் விசமத்தனமான செயலில் ஈடுபட்டுள்ளது

### விடுதலைப்புலிகளும், தமிழ்மக்களும் ஆட்சேபம்

(கிளிநொச்சி)

மக்கள் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டு அவலநிலையில் இருக்கும் போது சிறிலங்கா அரச ஊடகம் விசமத்தனமான முறையில் செய்திகளை வெளியிடுவதை யிட்டு விடுதலைப்புலிகளும், தமிழ்மக்களும் தங்கள் கடுமை யான ஆட்சேபத்தைத் தெரிவித் துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது; நேற்றுக் காலை 6.00 மணிக்கு ஒலிபரப்பான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ், ஆங்கில செய்திகளில் வைஸ்அட்மிரல் தயாசந்தகிரியை மேற்கோள் காட்டி தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவரும், புலனாய்வுப்பிரிவுத் தலைவரும் சுனாமி அனர்த்தத்தில் இறந்த அல்லது காணாமல் போனோர் பட்டியலில் அடங்கி யிருக்கலாம் எனச் செய்தி ஒலி பரப்பப்பட்டது.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனம் செய்திகளின் உண்மைத் தன்மையை சரியான தரப்புகளில் இருந்து அறிந்துகொள்ளாது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசியல் லாபம் தேட முயலும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினூடாக வினைத்திறனுடன் வேலைத்திட்டங்கள்

### - சி.என்.என் செய்தியாளர் பாராட்டு

இலங்கையின் வடக்குப் பகுதியை விடுதலைப்புலிகள் தங்கள் ஆளுகைக்குள் வைத்துள்ளார்கள். அத்தோடு அவசர உதவி மீட்பு நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக மேற்கொள்கிறார்கள்.

அனைத்து உதவி நிறுவனங்களும் இந்நிறுவனத்தினூடாக மிகுந்த வினைத்திறனுடன் தமது வேலைத்திட்டங்களைச் செயற்படுத் துகிறார்கள். இருபது வருட நீண்ட உள்நாட்டு யுத்தத்தில் தாம் மிகுந்த அனுபவங்களையும் தேர்ச்சித்தன்மையையும் பெற்றிருப்பதாகவும் எவ்வாறு மக்களுக்குப் புனர்வாழ்வுப் பணி செய்வது, எவ்வாறு அம் மக்களுக்குரிய உதவிகளைப் பெற்றுத் தருவது போன்ற விடயங் களைச் சரிவர அறிந்திருப்பதாகவும் இந்நிறுவனம் கூறுகிறது என அமெரிக்கத் தொலைக் காட்சி நிறுவனமான சி.என்.என் செய்தியாளர் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.செயலரின் முல்லை விஜயத்திற்கு

# சந்திரிகா அரசு முட்டுக்கட்டை போட்டது!

## கொபிஅனான் விரும்பிய போதும் அரசின் நிகழ்ச்சி நிரலில் இடமில்லை

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள்பொதுச் செயலர் கொபி அனான் முல்லைத்தீவு சென்று சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தைப் பார்வையிடவும், மக்களைச் சந்திக்கவும் விரும்பிய போதும் அரசின் நிகழ்ச்சி நிரலில் அதற்கான நேரத்தை சிறிலங்கா அரசாங்கம் ஒதுக்கீடு செய்யாது தவிர்த்துள்ளது.**

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்ட அனைத்துப்பகுதிகளுக்கும் தாம் விஜயம் செய்ய ஆவலாக உள்ளபோதும் இலங்கை அரசே தனது விஜயத்திற்கான நிகழ்ச்சிநிரலைத் தயாரித்ததாக ஐக்கிய நாடுகள் செயலாளர் கொபி அனான் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டைக்கு நேற்று விஜயம செய்த கொபிஅனான் செய்தியாளர்க ளிடம் கருத்துத் தெரிவித்த வேளை, புலிகளது கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் இருக்கும் பகுதிகளில் சுனாமியால் பேர ழிவு ஏற்பட்டிருக்கின்றது. ஆகையினால்

(12ஆம் பக்கம் பார்க்க)



## அம்பாந்தோட்டை, காலி திருமலைக்கு அனான் விஜயம்

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் நேற்றுக் காலை உலங்குவானூர்தி மூலம் அம்பாந்தோட்டை, காலி ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்து பின்னர் கிழக்கு மாகா ணத்தில் திருகோணமலைக்கு அங்கு ஆலங்கேணி மற்றும் கிண்ணியா மத்திய அகதி முகாம்களுக்கும் விஜயம் செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மக் களை பார்வையிட்டுள்ளார்.

### வீரவணக்கம்

26.12.04 அன்று முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். கடற் கரும்புலி மேஜர் எழிலரசன்/எழில் (நாகேந்திரம்-அமுதன் ஈச்சிலம் பற்றை விநாயகர்புரம் மூதூர்)

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொபி அனான் வன்னிக்கு வருகை தரக் கோரி கிளி.,வடமராட்சி கிழக்கு அமைப்புக்கள் மகஜர்

இலங்கைக்கு வருகை தந்திருக்கும் ஐ.நா.சபையின்செயலாளர் நாயகம் கொபி அனான் அவர்கள் வன்னிப் பிரதேசத்திற்கு வருகை தந்து "சுனாமி" அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் துன்பப் பட்ட மக்களையும் யுத்தத்தால் அழிந்து போன பகுதிகளையும் பார்வையிட வேண் டும் எனக் கோரி நேற்று மாலை 5.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத் திலுள்ள பொது அமைப்புக்களும், வடம ராட்சி கிழக்கிலுள்ள பொது அமைப் புக்களும் இணைந்து கிளிநொச்சியிலுள்ள வன்னிக்கான "யுனிசெப்" பிரதிநிதி பெனிபுறூவ் அவர்களிடம் கையளித்தனர். மகஜர் பெற்றுக் கொண்ட யுனிசெப் பிரதிநிதி அவர்கள் இன்றே அவர் கையில் கிடைக்க ஆவண செய்வதாக உறுதியளித் தார்.

பின்வரும் அமைப்புக்களின் பிரதி நிதிகளும் பல நூற்றுக்கணக்கான மக் களும் இணைந்து மகஜரை கையளித்தனர்.

01) வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் கிளிநொச்சி மாவட்டம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நிர்வாகத்திறன்குறித்து சிக்காகோ ரிபியூன் பாராட்டு

நிவாரணப்பணிகளில் விடுதலைப்புலி களின் நிர்வாகத் திறன் குறித்தும், விடு தலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஒரு தனி நாடு போல் தோற்றமளிப்பதை விபரித்தும் சிக்காகோ ரிபியூன் பத்திரிகை நேற்று முன்தினம் கட்டுரை ஒன்றை வெளி யிட்டுள்ளது.

அக்கட்டுரையில் இப்பத்திரிகையின் சர்வதேச செய்தியாளர் கிம்பாக்கர் தெரி வித்த விபரங்கள் வருமாறு,

விடுதலைப் புலிகளின் ஒழுக்கமும், கட்டுப்பாடும், வீரமும் உலகம் அறிந்த உண்மை. இதனால் கடந்த இரண்டு தசாப்தங்களாக நடைபெற்ற ஈழப்போரில் இருந்து கிடைக்கப்பெற்ற பல அனுபவங் கள், இன்று கடற்புவி நடுக்க ஆழிப்பேர லையின் கொடூரத்தினால் பாதிக்கப்பட்ட தமிழீழ பிரதேசங்களில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளில் பிரதிபலிப்பதனை காணக்கூடி யதாக இருக்கின்றது.

இந் நிவாரணப் பணிகள் விடுதலைப் புலிகளால் நன்கு திட்டமிடப்பட்டும் மிகவும் சிறந்த முறையிலும் நடைமுறைப்படுத்தப் பட்டும் வருகின்றது. அவர்களின் கட்டுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி அனர்த்தத்தினால் பலியானோருக்கு லண்டன் வாழ் தமிழர்கள் அஞ்சலி

கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி கடல் அனர்த்தத்தினால் இலங்கை, இந்தியா, இந்தோனே சியா உள்ளிட்ட பல்வேறு நாடு களில் பலியான சுமார் ஒன்றரை லட்சம் மக்களுக்கு இலங்கை யைத் தாயகமாகக் கொண்ட லண்டன் வாழ் தமிழர்கள் லண் டன் மாநகர் றெஹ்பால் சதுக் கத்தில் அஞ்சலி செலுத்தியுள் ளனர்.

முன்னூறிற்கும் மேற்பட்ட மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 200 இலங்கையர் விடுதலை

சுனாமி அனர்த்தத்தை அடுத்து லெபனான் சிறையில் கைதிகளாக விருந்த 200 இலங்கையர்களை விடுதலை செய்ய லெபனான் அர சாங்கம் முடிவு செய்துள்ளது. மனிதாபிமான அடிப்படையில் இவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேசத்தின் நிதி உதவிகளை அரசு வடக்கு-கிழக்கிற்கு அனுப்ப முயலவில்லை

### - தமிழீழ கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை

மனிதாபிமான ரீதியாக உலக நாடுகள் பெருமளவு நிதியை அனுப்பிருக்கின்ற போதும் அர சாங்கம் அவற்றை வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு அனுப்புகிறதே தவிர இங்கு அதனை அனுப்புவதற்கான நட வடிக்கையை மேற்கொள்ள வில்லை. எனத் தமிழீழ கடற் படைச் சிறப்புத் தளபதி சூசை அவர்கள் பி.பி.சிக்கு தெரிவித் தார். அவர் மேலும் கூறுகையில்:

**கேள்வி:-** இப்பொழுது இலங்கை அரசிடம் இருந்து நிவாரண உதவிகள் கிடைக் கிறதா அல்லது சர்வதேச நிதியுதவி, சர்வதேச நிவாரண உதவி அரசின் அனுமதியுடன் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வந்து சேருகின்றதா?

பதில்:- முல்லைத்தீவு மாவட் டத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கம் அதாவது அரசாங்க அதிபருக்கு ஊடாக கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்காக 25 இலட்சம் ரூபாதான் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த 25 இலட்சம் என்பது இங்கு ஏற்பட்டுள்ள இரண்டு நாள் நடவடிக்கைக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் குடியிருத்தப்படவேண்டிய மக்களின் விபரமும் அவர்களுக்கான தேவைகளும்

| இல | கி.சே இல | கிராம சேவையாளர் பிரிவு | முகாம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் | குடும்பங்களின் எண்ணிக்கை | தேவையான கொட்டகைகள் யு.என்.எச்.சி.ஆர் | தேவையான நிலவிரிப்புகள் யு.என்.எச்.சி.ஆர். எஸ்.ஏ.எல்) | (1000 தண்ணீர் தாங்கிகள் (10குடும்பத்திற்கு) மலசலகூடம், குடிநீர் ஒக்ஸ்பாம் | மலசலகூடம் | மருத்துவ வீடு ஐ.சி.ஆர்.சி எம்.எஸ்.எவ். | முன்பள்ளிக்கான பெரிய கூடாரம் | பொது மண்டபம் | பொதுமண்டபத்திற்கான கதிரைகள் | மின்பிறப்பாக்கி, மின்னிணைப்பு உபகரணங்கள் | மலசலகூடம், பொதுமண்டபம், முன்பள்ளி ஆகியவற்றை அமைத்துத்தருவதாக வாக்குறுதியளித்துள்ள நிறுவனங்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | J/425 | நாகர்கோயில் தெற்கு | குடாரப்பு | 26 | 26 | 26 | 05 | 13 | 1 | 1 | 1 | 4 | 1 | |
| 02 | J/426 | செம்பியன்பற்று வடக்கு | மாமுனை | 95 | ·95 | 95 | 19 | 48 | 1 | 1 | 1 | 14 | 1 | போரூட் |
| 03 | | செம்பியன்பற்று வடக்கு | செம்பியன்பற்றுவடக்குவீதி | 115 | 115 | 115 | 23 | 58 | 1 | 1 | 1 | 16 | 1 | |
| 04 | J/428 | மருதங்கேணி | மருதங்கேணி வடக்கு | 120 | 120 | 120 | 24 | 60 | 1 | 1 | 1 | 17 | 1 | |
| 05 | | | தாளையடி | 80 | 80 | 80 | 16 | 40 | 1 | 1 | 1 | 11 | 1 | |
| 06 | J/429 | வத்திராயன் | அரசடிவீதி | 135 | 135 | 135 | 27 | 68 | 1 | 1 | 1 | 19 | 1 | எஎஸ்வி/என்.பி.ஏ |
| 07 | | | வாரிவிட்டன் வீதி | 110 | 110 | 110 | 22 | 55 | 1 | 1 | 1 | 16 | 1 | |
| 08 | J/430 | உடுத்துறை | 9ஆம் வட்டாரம் | 155 | 155 | 155 | 31 | 78 | 1 | 1 | 1 | 22 | 1 | |
| 09 | | | 10ஆம் வட்டாரம் | 120 | 120 | 120 | 24 | 60 | 1 | 1 | 1 | 17 | 1 | |
| 10 | | | கொக்கிளாய் வீதி | 120 | 120 | 120 | 24 | 60 | 1 | 1 | 1 | 17 | 1 | |
| 11 | J/431 | ஆழியவளை | கொக்கிளாய் | 158 | 158 | 158 | 32 | 79 | 1 | 1 | 1 | 23 | 1 | ஒக்ஸ்பாம் |
| 12 | | | பாடசாலை வீதி | 107 | 107 | 107 | 21 | 54 | 1 | 1 | 1 | 15 | 1 | |
| 13 | J/432 | வெற்றிலைக்கேணி | இடைக்காடு | 105 | 105 | 105 | 21 | 53 | 1 | 1 | 1 | 15 | 1 | |
| 14 | | | விநாயகபுரம் | 90 | 90 | 90 | 18 | 45 | 1 | 1 | 1 | 13 | 1 | |
| 15 | J/433 | முள்ளியான் | நித்தியவெட்டைவீதி | 110 | 110 | 110 | 22 | 55 | 1 | 1 | 1 | 16 | 1 | சோபா |
| 16 | | | கட்டைக்காடு | 95 | 95 | 95 | 19 | 48 | 1 | 1 | 1 | 14 | 1 | |
| 17 | J/434 | போக்கறுப்பு | கேவில் | 27 | 27 | 27 | 05 | 14 | 1 | 1 | 1 | 04 | 1 | |
| 18 | | சுண்டிக்குளம் | கட்டடி | 52 | 52 | 52 | 10 | 26 | 1 | 1 | 1 | 07 | 1 | ஐ.சி.ஆர்.சி |
| 19 | | | பேப்பராப்பிட்டி | 50 | 50 | 50 | 10 | 25 | 1 | 1 | 1 | 07 | 1 | |
| | | மொத்தக்குடும்பங்களின் எண்ணிக்கை | | 1870 | 1870 | 1870 | 374 | 935 | 19 | 19 | 19 | 267 | 19 | |

# தற்காலிக கொட்டகைகள் அமைக்கும் ஆரம்ப வேலைகள் துரிதம்

சுனாமி பேரலை அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் துரிதகதியில் நடை பெற்று வருகின்றன.

மேற்படி அனர்த்ததினால் முல்லைத்தீவில் இருந்து இடம் பெயர்ந்து நலன் புரிநிலையங்களில் வசிக்கும் 13 கிராமங்களைச் சேர்ந்த 1815 குடும்பங்களுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைத்து குடியமர்த்து வதற்கான 13 இடங்கள் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட நிலையில் அவ்விடங்களை சீர்படுத்தும் செயற்பாடுகள் தற்போது துரிதகதியில் நடைபெற்று வரும் இதேவேளை இவ்விடங்களில் குடியமர்த்தப்படவுள்ள 1815 குடும்பங்களையும் குடியமர்த்துவதற்கு தேவையான பொருட்களின் விபரம் அப்பகுதி செயலணிக்குழுவினரால் திட்டமிடப்பட்டுள்ளன. அதாவது. 1815 குடும்பங்களுக்கும் 1815 கொட்டகைகளும், 1815 நில விரிப்புகளும், ஆயிரம் லீற்றர் கொள்ளவு கொண்ட நீர்தாங்கிகள் 10 குடும்பத்திற்கு 1 எனும் அடிப்படையில் 364, மலசல கூடம் 364, மருத்துவ வீடு 13 முன்பள ளிக்கான பெரிய கூடாரங்கள் 16, பொது மண்டபங்கள் 13 மின் பிறப் பாக்கிகள் 13 தேவைப்படுகின்றன. இத்தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்கான உதவிகளை உதவி வழங்கும் நிறுவனங்களும் மற்றும் அரச நிறுவனங்களும் வழங்க முன்வந்துள்ளதாகவும் தெரியவருகிறது.(ச)

## பேரலை தாக்கத்தால் காயமடைந்த வயோதிபர் ஒருவர் மரணம்

சுனாமியால் பாதிக்கப்பட்டு படுகாயமடைந்து யாழ் போதனாவைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபர் ஒருவர் கடந்த வியாழக் கிழமை இரவு 11.00 மணியளவில் மரணமானார். பருத்தித்துறை இன்பு ருட்டியைச் சேர்ந்த செல்லத்துரை - பாலகிஷ்ணன் (வயது 59) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் சம்பவதினம் வள்ளத்துடன் நசியுண்டு படுகாயமடைந்தார். என்பதுகுறிப்பிடத்தக்கது. (45)

# அரசியல் வேறுபாடின்றி மக்களின் இன்னல் போக்க கொபி அனான் முன் வர வேண்டும்

## - தென்னிந்திய திருச்சபை ஆயர் ஜெபநேசன்

ஐ.நா பொதுச் செயலர் உலகின் எந்தப் பகுதியிலும் எந்த அனர்த்தம் நடந்தாலும் அரசில் வேறுபாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் மக்களின் இன்னல் போக்க முன்வரவேண்டும் என தென்னிந்தியத் திருச்சபை பேராயர் எஸ். ஜெபநேசன் கேட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்: முன்னரும் தமிழ்ப் பிரதேசங் களுக்கு வர முயற்சித்த ஐநா பொதுச செயலர் கொபி அனான் அரசியல் அழுத்தங்கள் காரணமாக அந்த விஜயத்தை ரத்துச் செய்தார். இன்று தமிழ் பேசும் மக்கள் கண்ணீர்க் கடலில் மிதக்கின்றனர். ஐ.நா செயலர் அம்பாந்தோட்டை யையும் காலியையும் பார்த்துவிட்டு திரும்பி விட முனைவது கவலைக் குரிய விஷயமாகும். அவர் எப்படி யாவது தமிழ்ப் பகுதிகளுக்கு வந்து விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டு பகுதிக்கும் செல்வதுடன் புலிகளின் தலைமையினரையும் சந்திக்க வேண்டுமென அவசர தந்தி அனுப்பியுள்ளேன். முழு இலங்கை யையும் பாருங்கள் எங்கே என்ன நடக்கின்றது என்று அவதா னியுங்கள் என்று இரந்து கேட்டுள் ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

ஓம் வஜராட் விஸ்வப் பிரம்மனே நமக!

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் பாலையா நிர்மலகாந்

நாற்பத்தைந்து நாளுமாயிற்றோ முழுநிலவு மறைந்து இப்பொழுது நினைத்தாலும் உள்ளம் தடுமாறுகிறதே ஆண்டவன் திருப்பாதங்களைப் பணிந்து ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 09.01.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கீரிமலையிலும் வீட்டுக் கிருத்தியம் 10.01.2005 திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு 20, அரசடி ஒழுங்கை, (மில்க்வைற்) யாழ்ப்பாண இல்லத்திலும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுகளில் கலந்துகொள்வதோடு, மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

20, அரசடி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(சி-11183)

# உளவளத்துறையை வழிப்படுத்துதல் தொடர்பில் கிளி.பி.சு.சே.பணிமனையில் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உள வளத்துறையை வழிப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணி மனையில் நடைபெற்றுள்ளது.

மேற்படி கலந்துரையாடல் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தலை மையில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் போதனா வைத்தி யசாலை உளநல மருத்துவ நிபுணா பேராசிரியர் தயாசோமசுந்தரம் கலந்து கொண்டிருந்தார்.

இந்த சுனாமி தாக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு உளவளத்துறையை வழிப்படுத்து தல் என்ற நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுப்பதற்கு பயிற்றுவிக்கப்பட்ட உளநல சிகிச்சையாளர்கள், சமூகசேவை யாளர்கள், வைத்தியர்கள் ஆகி யோர் தேவையானவர்களுக்குரிய ஆலோசனைகளை வழங்கவுள் ளனர்.

இதற்கு அன்னை இல்லத்து உளவளத்துறையாளர்களும் ஜிரி.சற, யு.என்.எச்.சி.ஆர் ஆகிய நிறுவ னத்தில் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரி யர்களும் இத்திட்டத்தில் பயன் படுத்தப்படவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சிமாட்ட வைத்திய அதிகாரி த.பாஸ்கரன், வைத்திய கலாநிதி யூடிரமேஸ்குமார் ஆகி யோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கம் சுனாமி என்ற கடற்கொந்தளிப்பால் தமது உறவு களை இழந்தும், உடமைகளை இழந்தும், சொந்த இருப்பிடங் களை இழந்தும், நலன்புரி நிலை யங்களில் தஞ்சமடைந்து மனம் விரக்தியடைந்த நிலையில் வாழும் மக்களை உளரீதியாக பாதிப்பிற்கு உள்ளாகாமல் இருப்பதற்கு வழிகாட்டுவதாகும்.

இதனை உளவளத்துறையில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் நலன் புரிநிலையங்களுக்கு சென்று அங்கு மக்களுடன் கலந்துரையாடி அவர்களை உளரீதியில் பாதிக் காதவாறு கையாண்டு அடுத்தகட்ட நடவடிக்கையில் ஈடுபடச் செய்ய வழி செய்வார்கள்.

அதற்கு மேலாக உளரீதியில் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களை வைத்திய நிபுணர்களிடம் அனுப்பி அவர்களூடாக ஆலோசனைகள் வழங்கப்படும். அத்துடன் இந்த உளவளம் பேணுதல் தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் மக்கள் மத்தியில் வழங்கப்படவுள்ளது. (கு)

# தீவுகள்-துறைமுக நகரங்களை கடல் விழுங்கும் அபாயம்

# உலகம் வெப்பம் அடைவதால் கடல் மட்டம் உயர்கிறது

(ஒஸ்லோ)

**உலகம் வெப்பம் அடைந்து வருவதால் கடல் மட்டம் ஆண்டு தோறும் உயர்ந்து வருகிறது. இதனால் தீவுகள், துறைமுகநகரங்கள், கடலோரப்பகுதிகள் அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.**

கார்கள், மின்உற்பத்தி நிலையங்கள், தொழிற்சாலைகள் ஆகியவை வெளியிடும் புகையில் இருந்து வெளிப்படும் காபனீரெட்சைட் காரணமாக உலகம் நாளுக்கு நாள் அதிகளவில் வெப்பம் அடைந்து வருகிறது. இதனால் கடல் மட்டம் ஆண்டு தோறும் உயர்ந்து வருகிறது. அத்தோடு பனிக்கட்டி உருகுவதாலும் கடல் மட்டம் உயர்கிறது. கடந்த 20ஆம் நூற்றாண்டில் கடல் மட்டம் 10 முதல் 20 சென்ரி மீற்றர் உயர்ந்துள்ளது. இப்போது கடல் மட்டம் ஆண்டுதோறும் 2 மில்லிமீற்றர் உயர்ந்து வருகிறது. அடுத்த 95 ஆண்டுகளில் அதாவது 2100 ஆம் ஆண்டில் உலக வெப்பம் 1.4 முதல் 5.8 டிகிரி சென்ரிகிரேட் உயரும். இதனால் கடல்மட்டம் 9 முதல் 88 சென்ரி மீற்றர்வரை உயரும்.

அப்படி உயரும்போது சிறிய தீவுகள், துறைமுக நகரங்கள், கடலோரப்பகுதிகள் ஆகியவை கடலில் மூழ்கிவிடும் அபாயம் உள்ளது.

மாலைதீவு, பசுபிக்பெருங் கடலில் உள்ள டுவாலு ஆகிய நாடுகள் கடலில் மூழ்கிவிடும் என்று அஞ்சப்படுகிறது.

கடலோரங்களில் உள்ள கொல்கத்தா, டாக்கா, லாகோஸ், லண்டன், நியூயோர்க், சங்காய், டோக்கியோ ஆகிய நகரங்களுக்கு பெருமளவில் சேதமேற்படும்.

கிறீன்லாந், அந்தாட்டிக் பகுதிகளில் பனிக்கட்டிகள் எதிர்பார்த்ததை விடவேகமாக உருகத் தொடங்கியிருப்பதும் அபாயத்தை அதிகரித்துள்ளது. இந்த நிலையில் உயர்ந்து வரும் கடல்மட்டம் குறித்தும் சுனாமி பேரழிவில் இருநது பாதுகாத்துக்கொள்வது குறித்தும் ஆலோசிப்பதற்காக சிறிய தீவு நாடுகளின் மாநாடு மொறிசியஸ் நாட்டில் நாளை (திங்கட்கிழமை) தொடங்கி 14 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இதில் 37 சிறிய தீவு நாடுகள் கலந்துகொள்கின்றன.



சீனாவில் ஹீலோ ஜியாங் மாகாணத்தில் ஆண்டு தோறும் பனிக்கட்டிச் சிற்பம் செதுக்கும் போட்டி நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டும் வழக்கம்போல் இந்தப் பனிக்கட்டி சிற்பக் கண்காட்சி தொடங்கி இருக்கிறது. இதற்காக ராட்சத பனிக்கட்டிகளை அங்கு வாகனங்களில் கொண்டு வந்து அடுக்கி வைக்கிறார்கள்.

பல்வேறு நாடுகளில் இருந்தும் ஏராளமான சிற்பக் கலைஞர்கள் இதில் கலந்து கொண்டனர். சீனக் கலைஞர்களில் ஒருவர் தனது பனிக்கட்டிச் சிற்பத்துக்கு இறுதி வடிவம் கொடுக்கும் காட்சி.

# இந்தோனேசியாவில் சுனாமி தாக்குதல் மேலும் ஏழாயிரம் உடல்கள் மீட்பு

(ஜகார்த்தா)

கடந்த மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அலைகள் ஏராளமான உயிர்களை பலி வாங்கி விட்டது. இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவு அருகே கடலுக்கு அடியில் ஏற்பட்ட பூகம்பத்தை தொடர்ந்தே இந்த சுனாமி அலைகள் உருவானது.

இந்தியா, தாய்லாந்து, இலங்கை, மாலைதீவு உட்பட ஆசியாவில் 11 நாடுகளில் சுனாமி அலைகள் மற்றும் பயங்கரமான நிலநடுக்கம் உருவான இந்தோனேசியாவில்தான் அதிக அளவில் உயிர்ச் சேதத்தையும் பொருள் சேதத்தையும் ஏற்படுத்தியது. இந்த சுனாமி தாக்குதலுக்கு 1 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்தோனேசியாவில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் இந்தோனேசியாவில் பண்டா ஆசி பகுதியில் இடிபாடுகளுக்கு அடியில் இருந்து மேலும் 7.118 உடல்களை மீட்பு படையினர் மீட்டுள்ளனர். அழுகிய நிலையில் அந்த உடல்கள் மீட்கப்பட்டன. அந்த உடல்கள் குவியலாக போட்டு அடக்கம் செய்யப்பட்டன.



இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் சுனாமி பாதித்த பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அமெரிக்கா அணுபேகம் ரிச்சார்டு என்ற போர்க் கப்பலை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கப்பலில் இருந்து உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்களை ஏற்றிக் கொண்டு ஒரு உலங்குவானூர்தி புறப்பட்டுச் செல்லும் காட்சி.

# பாக்தாத்தில் இருவேறு சம்பவங்களில் ஒன்பது அமெரிக்கப் படையினர் பலி


(பாக்தாத்)

பாக்தாத்தில் வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் அமெரிக்க இராணுவ வீரர்கள் 7 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் மேற்கு அன்பார் மாகாணத்தில் இரு கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் எப்படிக் கொல்லப்பட்டனர் என்ற விபரம் வெளியிடப்படவில்லை.

டிசம்பர் 21 ஆம் திகதி 14 அமெரிக்க வீரர்களும் 3 காண்ட்ராக்டர்களும் கொல்லப்பட்டதற்குப் பிறகு ஒரே நாளில் அதிக எண்ணிக்கையில் அமெரிக்க வீரர்கள் கொல்லப்படுவது இதுவே முதல் முறை.

பாக்தாத் நகரசாலையில் வியாழக்கிழமை மாலை கண்காணிப்பு வாகனத்தில் அமெரிக்க வீரர்கள் வந்த போது குண்டு வெடித்தது. இதில் வாகனத்தில் பயணம் செய்த 8 வீரர்களும் இறந்துவிட்டனர் என இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.



மாலை தீவின் தேசியப்பாதுகாப்புப் படையினர் சுனாமி கடற்பேரலையால் கரையில் ஒதுக்கப்பட்டு இறந்த திமிங்கலத்தின் உடலை அகற்றுகின்றனர்.

# மீண்டும் சுனாமி பேரலை வருவதாக வதந்தி இந்தோனேசிய, பிலிப்பைன்ஸ் மக்கள் ஓட்டம்

இந்தோனேசியாவிலும், பிலிப்பைன்சிலும் வியாழக்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து மீண்டும் சுனாமி பேரலை தாக்கப் போகிறது என்ற வதந்தி பரவியதால் கடலோர நகரங்களில் இருந்து மேடான பகுதிகளை நோக்கி ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

ஆனால் மக்கள் பயந்ததைப் போல சுனாமிபேரலைத் தாக்குதல் ஏதும் நடக்கவில்லை.

கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி சுனாமி தாக்குதலால் பேரழிவுக்குள்ளான பகுதி இந்தோனேசியாவின் பண்டா ஆசி அங்கு வியாழக்கிழமை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் திறன் ரிக்டர் கருவியில் 6.5 எனப் பதிவானது. இதையடுத்து மீண்டும் சுனாமி பேரலைகள் அந்த நகரத்தைத் தாக்கலாம் என்ற வதந்தி பரவியது.

இதேவேளை தெற்குப் பிலிப்பைன்சில் உள்ள பகதியன் நகரத்திலும் சுனாமி பேரலை தாக்கக் கூடும் என்ற வதந்தி வியாழக் கிழமை பரவியது.

அதைத்தொடர்ந்து ஆயிரக் கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினர். பிலிப்பைன்சின் மின்டானோ தீவில் வியாழக்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் கருவியில் அதன் திறன் 4.9 எனப் பதிவானது. அதைத் தொடர்ந்து அத்தீவில் உள்ள பகதியன் நகரில் கடல் உள்வாங்கியது. சுனாமி பேரலைத் தாக்குதலை நடத்துவதற்குத் தான் கடல்உள்வாங்குகிறது என்ற அச்சம் நகரில் பரவியது.

எனவே இந்தோனேசியாவைத் தாக்கியதைப் போன்ற சுனாமி பகதியன் நகரையும் தாக்கக்கூடும் என்று அஞ்சிய மக்கள் அங்கிருந்து வெளியேறினர். ஆனால் அவ்வாறு ஏதும் நிகழவில்லை.



கடந்த மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அலையினால் தாய்லாந்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். கடற்கரைப் பகுதிகளில் உள்ள ஹோட்டல்களும் சேதம் அடைந்தன. சுற்றுலா வந்த வெளிநாட்டுப் பயணிகள் பலர் பலியாகிவிட்டனர். அவாகளை சுனாமி அலைகளில் இருந்து காப்பாற்ற முடியவில்லை.

ஆனால் அங்குள்ள கோபீ பகுதியில் விலங்குகள் பாதுகாப்பு மையத்தில் நூற்றுக்கணக்கான பூனைகள் இருந்தன. அந்தப் பூனைகளை மீட்புப் படையினர் உயிரோடு மீட்டு விட்டனர். மீட்கப்பட்ட அந்தப் பூனைகளைப் பத்திரமாக வேறு இடத்துக்கு மீட்பு படையினர் கொண்டு செல்லும் காட்சி.

## ஆத்திரமடைந்தவருக்கு அபராதம்

(பெர்லின்)

ஜெ ர்மனியில் ஜ்வெய்புருக்கன் நகர நீதிமன்றில் சொத்துத் தகராறு காரணமாக வழக்கு நடந்தது. இதில் ஒருவருக்கு அபராதம் விதிக கப்பட்டது. தீர்ப்பைக் கேட்டதும் அவர் ஆத்திரம் அடைந்தார். நீதிமன்றத்தை விட்டு வெளியேறிய போது கோபத்துடன் நீதிமன்றக் கதவை ஓங்கி அறைந்து சாத்தி விட்டுச் சென்றார். இதனால் கதவு அதிர்ந்தது. இதனால் அதிருப்தி அடைந்த நீதிமன்ற நீதிபதி கோபத்துடன் கதவைச் சாத்தியதற்காக கூடுதலாக மேலும் அபராதம் விதித்தார்.

# வங்கதேசத்தில் பல்வேறு தீ விபத்து 23 பேர் பலி; 100 பேர் படுகாயம்

(டாக்கா)

வங்கதேசத்தில் வெவ்வேறு சம்பவங்களில் ஏற்பட்ட தீ விபத்தில் 23 பேர் பலியானதுடன் 100 பேர் காயமடைந்தனர்.

வங்கதேசத்தின் தலைநகர் அருகே, தைத்த ஆடைகள் தயாரிப்பு நிறுவனத்தில் ஒரு தீ விபத்தும், மற்றொன்று குடிசைப் பகுதியிலும் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாராயண கஞ்ச் மாவட்டத்தின் அருகே இருந்த ஆடைகள் தயாரிப்பு நிறுவனத்தில் தீ விபத்து ஏற்படும் போது, 400 தொழிலாளர்கள் உள்ளே வேலை செய்து கொண்டிருந்ததாகவும், இதில் 22 ஊழியர்கள் பலியானதாகவும், தீயணைப்பு வீரர்கள் உட்பட 50 பேர் காயமடைந்ததாகவும், தீயணைப்பு அதிகாரிகள் கூறினர்.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் என்னவென்று சரியாகத் தெரியவில்லை. என்று பத்திரிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டெம்ரா பகுதியில் உள்ள குடிசைகளில் ஏற்பட்ட பெரும் தீ விபத்து ஒன்றில் ஒருவர் பலியானார். 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். தவிர 4 பேரைக் காணவில்லை. இந்த தீவிபத்தில் 100 இற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்து விட்டதாக அதிகாரிகள் கூறினர்.

# இயற்கை அனர்த்தங்களினால் உருவாகும் அழிவுகளுக்கு திட்டமிடப்படாத நடவடிக்கைகளே முக்கிய காரணம்!

-தமிழீழக் கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை

(அலுவலக செய்தியாளர்)

**முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பட்ட இந்த இயற்கை அனர்த்தத்தினால் இவ்வளவு உயிர்ச்சேதங்கள் ஏற்படக் காரணமாக அமைந்தது, கடந்த காலங்களில் திட்டமிடலாளர்கள் நேர்த்தியாகச் செயற்படாததும், திட்டங்களைச் சரிவரச் செயற்படுத்தாமையுமே ஆகும். இவ்வாறு தமிழீழக் கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் முல்லைத்தீவில் நடைபெற்ற மீள் கட்டுமானப் பணிக்கான திட்டமிடல் குழு கலந்துரையாடலின் போது அவர் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.**



அவர் மேலும் கூறுகையில், இந்தத் திட்டமிடல் குழுக்களுக்கான கலந்துரையாடல் இந்தப் பகுதியில் இடம்பெற வேண்டும் என்று சில தினங்களுக்கு முன்னர் வலியுறுத்தப்பட்டது. அதற்கான காரணம் இங்கு ஒரு மதிப்பீடு எடுக்கப்பட்டிருக்கின்றது. அது எவ்வாறானது எனில் தொழில் மதிப்பீடு இந்தத் தொழில் மதிப்பீட்டை ஒரு மீன்பிடியாளரிடம் கேட்கும்போது அவர் இப்பொழுது என்ன தொழிலை மேற்கொள்கின்றாரோ அந்தத் தொழில் மதிப்பீட்டையே கூறுவார். உதாரணமாக இந்த மாத காலத்தில் இறால் பிடிக்கப்படுகின்றது என்றால் அவர் அதற் கான வலையையும் அது தொடர்பான தேவைகளையும் மட்டும் தான் கூறுவார்.

ஆனால் முழுமையான தொழில்கள் அனைத்தையும் மேற்கொள்வது தொடர்பான மதிப்பீடு பெறப்படவில்லை. அது தொடர்பான திட்டமும் இந்த திட்டமிடல் குழுவிற்கு வழங்கப்படவில்லை.

இடத்திற்கு இடம் தொழில்கள் வேறுபட்டவையாக இருக்கின்றது. இதற்காகத்தான் இந்தத் திட்டங்களைத் தீர்மானிக்கும்போது அந்தத் திட்டங்களை அந்தக் கிராமத்தில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஆழமாகப் பலகாலம் வாழ்ந்தவர்களிடம் கலந்தாலோசித்து இந்தத் திட்டங்களைப் போடும்போது மிக மிகப் பிரயோசனமாக இருக்கும்.

உண்மையில் முல்லைத் தீவுக்கு இந்த அழிவு ஏற்படக் காரணம் கடந்த காலங்களில் தீர்மானிக்கப்படாத இடங்களில் எல்லாம் ஐஸ்கட்டித் தொழிற்சாலை நிறுவப்பட்டிருக்கின்றது.

மக்களின்குடியிருப்புகளுக்குள் இந்தத் தொழிற்சாலைகளை நிறுவியபோது அங்கிருந்த மக்கள் இருப்பிடங்களை இழந்து கள்ளப்பாடு என்ற பகுதிக்குள் தள்ளப்பட்டனர். அந்தக்கள்ளப்பாடு கூட கடல் கொண்டு போகக் கூடும் என்று கூறி ஏற்கனவே அணை கட்டச் சொல்லி 1980களில் வலியுறுத்தப்பட்டது. அது கூடக் கட்டப்படவில்லை.

மாறாக என்ன செய்யப்பட்டது என்றால் அவர்களது குடும்பங்கள் அதிகரிக்க அதிகரிக்க அவர்கள் கரையை நோக்கிச் செல்லவேண்டிய தேவை இருந்தது. ஏனென்றால் அதனைத் தீர்மானித்து குடியமர்த்துவதற்கு அன்றைய அதிகாரிகள்யாரும் முயற்சிக்க வில்லை. ஏன் முயற்சிக்கவில்லை என்றால் அவர்கள் திட்டமிடுகின்ற ஒரு அலுவலகத்திலிருந்து தீர்மானிப்பார்கள். அந்த அலுவலகத்திற்கும் சம்பந்தப்பட்ட இடத்திற்கும் நீண்ட தூரமாக இருக்கும்.

அடுத்ததாக இந்த வட்டு வாகல் பாலம் இது மிகவும் முக்கியமானதாகும். அது பாரிய வேலைத் திட்டம் இல்லை அதைச் சுலபமாகப் புனரமைப்புச்செய்யப்பட கூடியதாகும். அந்தப்பாலம் திருத்தப்படவில்லையெனில் இந்தப் பகுதி துண்டிக்கப்பட்டுவிடும்.

உண்மையாக இப்படியான பல பிரச்சினைகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு அதற்கான அடித்தளங்களைப் போடுவதற்காகத்தான் இந்த நிகொட் கட்டடப் பகுதிக்குள் திட்டமிடல் குழுவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டமிடல் குழுவில் அங்கம் வகிக்கின்ற நீங்கள் இந்தப் பகுதியில் நிலைகொண்டு இங்குள்ள அதாவது முல்லைத்தீவின் நாயாறு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு அதற்குரிய தீர்மானங்களை எடுக்க வேண்டும். எதிர்காலத்தில் இப்படியான கடல் அனர்த்தத்திலிருந்து மக்களைப் பாதுகாக்ககூடிய அளவில் திட்டங்கள் அமைக்க வேண்டும். இயற்கையாகவே முல்லைத்தீவு கடலுக்குள் உள்ளது. இதற்காகத் தான் இங்குள்ளவர்கள் 1985ஆம்ஆண்டு அரசாங்கத்திடம் வலியுறுத்தி இயற்கையாக இங்கு இருக்கின்ற இந்த தீடைக்கு ஊடாக ஒரு மீன்பிடித்துறைக்கு திட்டம் கொடுக்கப்பட்டு அந்தத் திட்டம் கொள்கை அளவில் ஏற்கப்பட்டதே ஒழிய அது நடைமுறையில் செய்யப்படவில்லை.

இதற்கு யுத்தம்காரணமாக முன்வைக்கப்பட்டது. அதனால்தான் இது கட்டப்படவில்லை என்று கூறப்பட்டது.

ஒட்டுமொத்தமாக நாங்கள் இந்த அனர்த்தத்தால் ஏற்பட்ட இழப்புக்களைச் சீர்படுத்துவதோடு மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் இப்படியான அனர்த்தம் ஏற்படா தவாறு திட்டம் தீட்டப்பட வேண்டும்.

சமாதான காலத்தில் இங்குள்ள மக்களின் தேவைகள் தொடர்பாக சிறான் என்ற அமைப்புக்கூடாக திட்டங்கள் வழங்கப்பட்டன. அவை அனைத்தும் செயல் வடிவம் தரவில்லை. இதற்கு பின்தான் மக்கள் தம்மிடமிருந்த பொருளாதாரத்துக்கு ஏற்ப, தம்மிடம் தேட்டமாக உள்ள நகை, காணி என்பனவற்றை விற்று தென்னிலங்கையில் பயன் படுத்திய படகுகளையும் எஞ்சின்களையும் குறைந்த விலைக்கு வாங்கி தொழிலில் ஈடுபட்டார்கள்.

இந்தத் திட்டமிடலை மேற்கொள்ளும் நீங்கள் 1985ஆம் ஆண்டு மக்கள் எப்படியான வளங்களைக் கொண்டு தொழிலில் ஈடுபட்டுள்ளார்களோ அதே வளத்தைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில் இன்று வகுக்கும் திட்டம் அமையவேண்டும்.

தென்னிலங்கையில் எவ்வாறான மீன்பிடி வளங்கள் மேற் கொள்ளப்பட்டிருக்கிறதோ அதே போன்று எமது பகுதியையும் வளப்படுத்த வேண்டும்.

இன்றைய இந்த சூழ்நிலையில் பல்வேறு வெளி நாடுகள் இங்கு உதவிபுரிய வந்துள்ளன . அந்த நாடுகள் இங்கு மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில்திட்டத்தைப் போடுவது மட்டுமல்லாது மக்களுடன் கலந்தாலோ சித்து அடிப்படைப் பிரச் சினையையும் நிரந்தரமான பிரச்சினை யையும் முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன் நலன்புரி நிலையங் களில் உள்ள மக்களை மீளக் குடியமர்த்தி அவர்கள் நிரந்தரத் தொழிலில் ஈடுபடும்வரை அவர்க ளுக்கு உள ரீதியான பாதிப்புக் கள் ஏற்படாத வகையில் தொடர்ந்து மாதாந்தம் குறைந்தது 5000 ரூபாவிற்கு மேல் வழங்கப்பட வேண்டும். இதனை நீங்கள் தொடர்ந்து வழங்கத்தேவையில்லை.

அவர்களுக்குரியதொழிலை மேம்படுத்தக் கூடியஅளவிற்குத் தேவையான வலைகளையும் படகுகளையும் வழங்கினால் அவர்களுக்கு இந்த மாதாந்தக் கொடுப்பனவு கூடத் தேவை இல்லை அவர்கள் தங்கள் சொந்த முயற்சியில் முன்னேறிவிடுவார்கள் அதனூடாக இந்தப்பகுதியும் முன்னேற்றம் அடைந்துவிடும். இவ்வாறு தனதுநீண்டஉரையில் கேணல்சூசை தெரிவித்தார். (கு,20)

-திருமணமாகி 3நாட்களில் -

## தவறவிடப்பட்ட தாலிக்கொடி காவல்துறை நடவடிக்கையால் மீட்பு!

திருமணமாகி மூன்று நாட்களில் முழங்காவிலில் இருந்து கிளிநொச்சி வரும் வழியில் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியைத் தவறவிட்டவர் காவல்துறையினரின் நடவடிக்கையால் அதனை மீளப்பெற்றுள்ளார்.

கடந்த 23.12.2004 அன்று தவற விடப்பட்ட மேற்படி தாலிக் கொடியைபிரதான வீதியில் கண்டெடுத்தவர்கள் சிலர் தமக்குள் பங்கிடுதல் தொடர்பான பிரச்சினையில் ஈடுபட்டதாகவும் இது தொடர்பாக விசாரணை செய்த நாச்சிக்குடா காவல் துறையினர் பொருளை மீட்டு உரியவரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பொருளைப் பெற்றுக் கொண்ட உரிமையாளர் மேற்படி காவல்துறையினரைப் பாராட்டியதுடன் பொருளைப் பங்கிட போட்டிபோட்ட நிலையிலும், கண்டெடுத்தவர்களுக்குத் தாமாகவே சிறுதொகைப் பணத்தைச் சன்மானமாக வழங்கமுன் வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மோட்டார் வாகனங்களுக்கான வருடாந்த உரிமம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

மோட்டார் வாகனங்களுக்கான 2005 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த உரிமம் தற்போது கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகன உதவி ஆணையாளர் காரியாலயத்தில் வழங்கப்பெற்று வருகின்றது.

வருடாந்த உரிமம் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்கள் பின்வரும் ஆவணங்களுடன் காரியாலயத்திற்கு சமுகமளிக்கும் வண்ணம் கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார்.

பதிவுச் சான்றிதழ்-மூலப்பிரதி, செல்லுபடியான நிலுவையிலுள்ள காப்புறுதி,2004 ஆம் ஆண்டிற்குரிய உரிமம், உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை, விண்ணப்பப்படிவம் MTA11, உரிய கட்டணம். (சோ)


## சுனாமியால் வளம்மிக்க விவசாய நிலங்கள் உவர் நிலங்களாக மாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி கடற்கொந்தளிப்பானது வெறுமனவே மக்கள் குடியிருப்புக்களை மட்டும் சேதப்படுத்தவில்லை .அவர்களின் விவசாய நிலங்களையும் உவர்ப்பகுதிகளாக மாற்றியுள்ளது.

மேற்படி அனர்த்தத்தினால் முல்லைத்தீவு பகுதியில் சேதமாக்கப்பட்ட விவசாய நிலங்களின் பரப்பளவுகள் பெறப்பட்டுள்ளன.

இதில் அளம்பில் பகுதியில் உலத்து வெளியில் 40 ஏக்கர், 10 ஆம் கட்டைப் பகுதியில் 12ஏக்கர், 9 ஆம்கட்டைப் பகுதியில்5 ஏக்கர், பனிவயல் பகுதியில் 80 ஏக்கர் வயல் நிலங்களும் முள்ளியவளை கரைச்சிகுடியிருப்பு வெளியில் 150 ஏக்கர், பூவரசன் வெளியில் 130 ஏக்கர், சிலாவத்தை வெளியில் 15 ஏக்கர் வயல்நிலங்களும் புதுக்குடியிருப்பு மாத்தளன் பகுதியில் 75 ஏக்கர் வலையர்மடம் பகுதியில் 75 ஏக்கர், வயல் நிலங்களும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன மொத்தமாக 582 ஏக்கர் வயல் நிலங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.



நெற்பயிர் கருகிய நிலையில்...

அவற்றுடன் 35 ஏக்கர் நிலக்கடலை பயிர்செய்யப்படும் பகுதியும், ஏனைய பயிர்கள்செய்கை மேற்கொள்ளப்படும் 25 ஏக்கரும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. (கு,20)

## இணையத்தளம் மூலம் அறிந்து கொள்ள வாய்ப்பு

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு கிளி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை மேற்கொண்டவர்கள் மற்றும் இறந்தவர்கள் சிலரின் சடலங்களை இணையத்தளம் மூலம் அறியக் கூடிய வசதியினை கிளிநொச்சி மருத்துவசங்கத்தினர் ஏற்படுத்தியுள்ளனர்.

மேற்படி விபரங்களை WWW.Kili medical.COM மூலம் தொடர்பினை மேற்கொண்டு அறிந்து கொள்ளலாமென தெரிவித்துள்ளனர். (சோ)

## சாரதி அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்றுள்ளது

(அலுவலக செய்தியாளர்)

பாலசுப்பிரமணியம் சிறி ஆனந்தன் பரவிப்பாஞ்சான் கிளிநொச்சி, முனுசாமி அனுரத்தலிங்கம் டி4 கிளிநொச்சி ஆகியோரது சாரதிஅனுமதிப் பத்திரங்கள் கிளிநொச்சி மாவட்டமோட்டார் வாகன போக்குவரத்து உதவிஆணையாளர் காரியாலயத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி பெயர்களை உடையவர்கள் காரியாலய நேரத்தில் சமுகம் கொடுத்து பெற்றுக்கொள்ளும் வண்ணம் உதவி ஆணையாளர் கந்தசாமி வேண்டியுள்ளார். (சோ)

# "சுனாமி" கோர அனர்த்தத்தின் அம்பாறை மாவட்டப் பதிவுகள்...





கல்முனையில் அழிவுற்றிருக்கும் வீடுகளின் ஒரு தொகுதி




அழிவுற்ற நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலை




காரைதீவில் அழிவுற்ற ஆலயத்தின் காட்சி



பாண்டிருப்பு கிராமத்தில் எஞ்சியிருக்கும் மனித உடல் எரியூட்டப்படும் காட்சி.



காரைதீவு சண்முகானந்தா வித்தியாலயத்தில் வெள்ளத்தின் மத்தியில் தங்கியிருக்கும் மக்கள்.



உறவுகளை இழந்து பெரிய நீலாவணைப் பாடசாலை யில் தஞ்சம் அடைந்திருக்கும் குடும்பம்.



அம்பாறை மாவட்டத்தில் நெருக்கடிகள் மத்தியில் மக்களுக்கான மனிதாபிமான உதவிப்பணி கள்.




அம்பாறை ,கல்முனை வீதி வெள்ளத் தால் மக்கள் போக்கு வரத் தில் அவலம்.

இமிழக அரசின் தலைமையில் நறுக் கென்று உச்சநீதிமன்றம் குட்டுவது போன்ற சம்பவமொன்று நடந்துள்ளது. அதுவும் சங்கராச்சாரியாரின் கைது விவகாரத்தைக் கண்டித்தே இந்தக் குட்டை தமிழக அரசு வாங்கும் அவலம் ஏற்பட்டு விட்டது என்பதே வெளித்தெரியும் உண்மையாகவுமுள்ளது.

அந்த வகையில் காஞ்சி சங்கராச்சாரியாரின் விடயத்தில் தமிழக அரசு அவசரப்பட்டு நடந்து கொண்டுள்ளதாக உச்ச நீதிமன்றம் கண்டித்துள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மேலும் உச்சநீதிமன்றத்



ஜெயலலிதா




பட்டதே தி.மு.க. ஸ்டாலினை வளைக்கத்தான் என்றே அப்போது பரபரப்பாகப் பேசப்பட்டது.

அதாவது நேரடியாக ஸ்டாலினை அம்பெய்த முடியாது என்பதனால் ஸ்டாலினுடன் தொடர்புடையதாக தமிழகப் பொலிசார் நம்பும் அப்புவை மடக்க நினைத்தார்கள்.

அதற்கும் அப்புவைக் கைது செய்வதற்காகவே தான் சங்கராச்சாரியாரைச் சிறைக்குள் தள்ளியதாகவும் தகவல்கள் வெளிவந்தன.

ஆனால் இன்றோ சங்கராச்சாரியாரை தமிழகப் பொலிசார் ஏன் கைது செய்தோம் என்பதனைக் கூறுவதற்குத் தகுந்த காரணங்களை முன்வைக்க முடியாது திண்டாடுவதையும் காண முடிகின்றது.

அதுமட்டுமன்றி அப்பு கூறுவதெல்லாம் உண்மையாகிவிடும் என்பது போன்று தான், தமிழகப் பொலிசார் நடந்து கொள்கின்றனர்.

இந்த வகையில் தான் ஏற்கனவே சங்கர

# சங்கராச்சாரியார் விவகாரத்தில் தமிழக அரசின் நிலை?

தில் சங்கராச்சாரியார் விவகாரத்தில் காரசாரமாக நடைபெறும் விவாதங்களைப் பார்க்கையில் நாளையோ நாளை மறு நாளோ கூட சங்கராச்சாரியாருக்கு உச்சநீதிமன்றம் பிணை வழங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தமிழகப் பொலிசார் சங்கராச்சாரியாரை இரண்டு காரணங்களுக்காகக் கைது செய்திருக்கின்றார்கள்.

*.சங்கரராமன் கொலை

*.கணக்காளர் கிருஸ்ணமூர்த்தி தாக்கப்பட்டமை.

இதில் இரண்டாவது தடவையாக சங்கராச்சாரியார் கைது செய்யப்பட்டதற்கும் கணக்காளர் கிருஸ்ணமூர்த்தி தாக்கப்பட்டதற்கும் தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்களை தமிழக அரசு சமர்ப்பிக்கவில்லை என்று சென்னை நீதிமன்றம் சங்கராச்சாரியாரை 50 ஆயிரம் ரூபா பிணையில் விடுதலை செய்திருக்கின்றது.

இதே போன்றேதான் சங்கரராமன் கொலைக்கும் சங்கராச்சாரியாருக்கும் தொடர்பே இல்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து சங்கராச்சாரியாரைப் பிணையில் விடுதலை செய்யும் நிலைமைகள் தான் பிரகாசமாகி வருகின்றது. ஆனால் சங்கரராமன் கொலைக்கும் சங்கராச்சாரியாருக்கும் மிக நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகவும் அதற்குப் போதிய ஆதாரங்கள் அனைத்தும் தம்மிடம் இருப்பதாகவும் ஆரம்பத்தில் தமிழகப் பொலிசார் மார்தட்டினார்கள் அந்தவகையில்,

*.சங்கரராமன் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் அவரைக் கொலை செய்வதற்கு பிரபல தாதாக்களுடன் சங்கராச்சாரியார் உரையாடியபோது அதனைப் பதிவு செய்துள்ளோம்.

*.சங்கரராமனை கொலை செய்தவர்களுக்கு, சங்கராச்சாரியார் அளித்த பணத்தைத் தாம் கைப்பற்றியுள்ளோம்.

போன்ற காரணங்களுடன் சங்கராச்சாரியாருக்கு எதிராக மூன்று பகுதியாக ஆவணங்களைச் சமர்ப்பித்திருந்தனர். ஆனால் சங்கராச்சாரியார் கைதுக்கு தமிழகப் பொலிசார் கூறியுள்ள காரணங்கள் ஏற்கக் கூடியதாகவும் அமையவில்லை அவை எங்கோ முட்டுப்படுவதையும் அவதானிக்கலாம்.

அந்த வகையில் சங்கரராமன் கொலை செய்யப்படுவதற்கு முன்னரே தமிழகப் பொலிசாருக்கு அவர் கொலை செய்யப்படப் போவது தெரியும் என்று கூறுகின்றனர். அப்படி எனில் சங்கரராமனை உயிருடன் ஏன் காப்பாற்ற முன்வரவில்லை.....? அல்லது உயிர்களைக் காப்பாற்றுவது தமிழகப் பொலிசாரின் கடமையல்ல என்பதா? அதுமட்டுமன்றி சங்கரராமனைக் கொலை

செய்தவர்களுக்கு சங்கராச்சாரியாரிடமிருந்து பணம் கைமாறிய போதாவது எல்லோரையுமே ஒட்டு மொத்தமாக கைது செய்திருக்கலாமே.....?

இதேவேளை சங்கராச்சாரியார், சங்கரராமனைக் கொலை செய்யுமாறு பிரபல தாதாக்களுடன் உரையாடியதைப் பதிவு செய்துள்ளதாகக் கூறிய தமிழகப் பொலிசார் இதுவரை அவ்வாறான ஆதாரங்கள் எதனையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கதோர் விடயம். முன்பு சங்கர மடத்திலிருந்தே 50 இலட்சத்தை சங்கராச்சாரியார் எடுத்து சங்கரராமனைக் கொலை செய்தவர்களுக்குக் கொடுத்தார் என்று கூறியவர்கள், தற்போதோ சங்கரமடத்திற்குச் சொந்தமான நிலமொன்றை விற்றுப் பெற்ற பணத்தையே கைமாற்றியதாகக் கூறுகின்றனர்.

ஆனால் சங்கரமடத்திற்குச் சொந்தமான நிலம் விற்கப்பட்டது உண்மை என்றும் அந்தப் பணம் சங்கரராமன் உயிருடன் இருக்கும் போதே வங்கியில் வைப்பில் இடப்பட்டுள்ளதும் கூடத் தெரிய வந்திருக்கின்றது. இப்படி இருக்கும் போது சங்கராச்சாரியார் கொடுத்த பணத்தைத் தாம் கைப்பற்றியுள்ளதாக தமிழகப் பொலிசார் கூறியதும் இங்கு பிசுபிசுத்துப் போவதையும் காணமுடியும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்ட தனால் தான் உச்சநீதிமன்றம் தமிழக அரசினை சங்கரராமன் கொலையுடன் சங்கராச்சாரியாரை இவ்வளவு அவசரமாக குற்றஞ்சாட்டி கைது செய்திருப்பது தகுந்த செயலல்ல என்பது போன்று எச்சரித்துள்ளதோ தெரியவில்லை. எனவே சங்கரராமன் கொலைக்கும் சங்கராச்சாரியாருக்கும் தொடர்புகள் இருக்கின்றதா... அது எவ்வளவு தூரம் உண்மையாகும்..... என்பதெல்லாம் இப்போது மிகப் பெரிய சந்தேக வினாக்களாக உருவெடுத்துள்ளன.

அத்துடன் சங்கராச்சாரியாருக்கோ உயர்நீதிமன்றம் (ஐகோட்) அளிக்க மறுத்த பிணையினை உச்ச நீதிமன்றம் அளித்து விடும் போல்தான் நிலைமைகள் படம் பிடித்துக்காட்டுகின்றன.

இப்படி எதுவுமே பொருத்தப்பாடற்ற குற்றச்சாட்டுக்களையே சங்கராச் சாரியார் மீது தமிழகப் பொலிசார் சுமத்தி உள்ளே தள்ளியுள்ளனர் போலுள்ளது. இதையே தான் எதிரொலிப்பது போன்று உச்சநீதி மன்றமும் வினா எழுப்பி இருக்கின்றது. அதாவது தமிழகப் பொலிசார் சங்கரராமன் கொலைக்கு

சங்கராச்சாரியாரே முழு முதற் காரணம் என்று தாக்கல் செய்த ஆவணங்கள் எதுவுமே சங்கராச்சாரியாருடன் சம்பந்தப்பட வில்லை என்று தமிழகப் பொலிசாருக்கு நெற்றியடி அடித்திருக்கின்றது. அதுமட்டுமன்றி தமிழக அரசு சங்கராச்சாரியார் விடயத்தில் தேவையின்றி அவசரம் காட்டுகின்றது. என்றும் குறைப்பட்டுக் கொண்டுள்ளது.

இந்த விடயம் தமிழகப் பொலிசாருக்கு நன்றாகவே உறைத்து விட்டது எனலாம். ஏனெனில் தமிழகப் பொலிசார் உச்ச நீதி



ரமேஷ்



சங்கராச்சாரியார்



ஸ்டாலின்

மன்றம் சங்கராச்சாரியாருக்கு பிணை வழங்கக் கூடாது என்றும், கணக்காளர் கிருஷ்ண மூர்த்தி தாக்கப்பட்ட வழக்கில் சென்னை நீதிமன்றம் சங்கராச்சாரியாருக்கு அளித்த பிணையினை இரத்துச் செய்யுமாறும் மனுத்தாக்கல் செய்தும் நன்மை எதுவுமே கிட்டவில்லை.

தமிழகப் பொலிசார் சங்கராச்சாரியாருக்கு எதிராக சுமத்திய குற்றச்சாட்டுக்கள் எதுவும் அவருடன் சம்பந்தப்படவில்லை என்றுதான் உச்ச நீதிமன்றத்தின் விவாதத்தின் பின்னரான முடிந்த முடிவு.

· எனவே தான் சங்கராச்சாரியாரை உச்ச நீதிமன்றம் பிணையில் வெளியே வர அனுமதிக்கும் என்று நம்பிக்கை எதிரொலிக்கின்றது.

இதனை தமிழகப் பொலிசாரும் நூறு வீதமாக நம்புகின்றனர். அதனால் தான் சங்கராச்சாரியாருக்கு உச்ச நீதிமன்றத்தில் பிணை வழங்கப்பட்டு, அவர் வெளியே செல்ல முடியாதவாறு அவரை திருக்கோட்டில் அர்ச்சகர் மாதவன் கொலை தொடர்பாக மூன்றாவது தடவையாக கைது செய்வோம் என்று அறைகூவல் விடுத்துள்ளனர்.

அதுவும் பிரபல தாதா அப்புவின் வாக்குமூலத்தை வைத்தே சங்கராச்சாரியாரை மூன்றாவது தடவையாக கைது செய்யப் போவதாக மிரட்டல் விடுக்கின்றனர்.

உண்மையில் அப்பு கைது செய்யப்

மட காசாளர் ஸ்ரீசுந்தரஜயர் கைது செய்யப்பட்டதும், சங்கராச்சாரியாரின் சகோதரர் விஜேந்திரர் இந்தா கைது செய்யப்படப்போகிறார் என்று சுற்றி வளைக்கப்பட்டதும் ஆகும். இவையனைத்திற்கும் காரணம் சங்கர மடத்தை தமிழக அரசு தம்வசம் கைப்பற்றுவதற்கான திட்டமே என்று கூட தீப்பொறியொன்று கிளம்பியிருக்கின்றது.

மறுபுறம் அ.தி.மு.க.வைச்சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான நிலமொன்றை சங்கராச்சாரியார் அபகரித்துக் கொண்டார் என்றும், அதனால் தான் அந்தப் பிரமுகர் மேலிடத்திற்கு நெருங்கியவர் என்பத னால் அங்கிருந்து பறந்த உத்தரவுகளையடுத்தே தமிழகப் பொலிசார் சங்கராச்சாரியாரைக் குருட்டுக் காரணங்களைக் காட்டி கைது செய்ததாகவும் இப்போது புகைக்க ஆரம்பித்துள்ளது.

எனவே சங்கராச்சாரியாரின் கைது

**அ.கலைவாணி**

வரவர பெரிய பூதாகரமாகிவருகிறதே தவிர, உண்மைகள் வெளிவருவதாகத் தெரியவில்லை. இந்த உண்மைகள் முடங்கிப் போகப்போக சங்கராச்சாரியார் மீது தமிழகப் பொலிசார் சுமத்திய குற்றச்சாட்டுக்களும் வலுவிழந்து போனாலும் போகலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக சங்கர மடத்திற்குச் செல்லும் பாதைகளைத் துண்டித்து இரவோடு இரவாக சங்கர மடத்தை முற்றுகையிட்டு சங்கராச்சாரியார் உலகில் பெரிய கிரிமினல் போன்றுதான் தமிழகப் பொலிசார் சங்கராச்சாரியாரைக் கைது செய்தனர்.ஆனால் இன்றைய நிலையில் சங்கராச் சாரியாருக்கு உச்ச நீதிமன்றம் பிணை வழங்கும் பட்சத்தில் தமிழகப் பொலிசாரின் நடவடிக்கைகள் கேள்விக்குரியவை ஆகிவிடும்

# சுனாமி பற்றிய பேச்சு ஓயும்போது அரசு யுத்தத்திற்குத் தயாராகிவிடும்!



சுனாமி பேரலைகளால் இலங்கைக்கு ஏற்பட்ட பேரழிவு ஒருவகையில் மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணி அரசாங்கத்திற்கு இலாபகரமான ஒன்றாகிவிட்டது. ஏனெனில் அழிவுற்ற பிரதேசங்களில் பொ.ஐ.முன்னணி அரசாங்கம் புனர் நிர்மானப் பணிகளை மேற்கொள்ளப்போகிறதோ இல்லையோ அது பெருமளவிலான நிதி உதவிகளை சர்வதேசத்திடம் இருந்து பெற்றுக் கொண்டுள்ளது.

ஒரு புறத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென நிவாரணப் பொருட்கள் வந்து குவிந்து கொண்டே இருக்கையில், இன்னொரு புறத்தில் நிதி உதவிகள் தொடர்பான அறிவிப்புக்களும், முன்னைய கடன்கள் இரத்து தொடர்பான அறிவிப்புக்களும் வெளியிடப்பட்ட வண்ணம் உள்ளன. இந்தவகையில் சிறிலங்கா அரசாங்கம் சுனாமி பேரலைகள் தாக்குவதற்கு முன்னால் எதிர்நோக்கிய பாரிய பொருளாதார நெருக்கடி, அந்நிய செலாவணிப் பற்றாக்குறை என்பன நிவர்த்திக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

சிறிலங்காவிற்கு ஏற்கனவே உதவி வழங்கும் பட்டியலில் உள்ள நாடுகள் சுனாமி தாக்கத்தின் பின்னர் பல மில்லியன் டொலர் உதவிகளை அறிவித்துள்ளன. இதே சமயம் இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஆசிய நாடுகளை மீளக் கட்டியெழுப்புதல் தொடர்பாக ஆராய்வதற்குக் கூடிய மாநாட்டில் ஜப்பான் இப் பாதிப்புற்ற நாடுகளுக்கு தாம் வழங்கியிருந்த கடன்களை இரத்துச் செய்வதாக அறிவித்துள்ளது. இதே போன்று வேறு சில நாடுகளும் அறிவிப்புச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய உதவிகளினால் சிறிலங்கா அரசாங்கம் தென்பு பெறும் என்பதில் சந்தேகமில்லை. இது ஏற்கனவே உணரப்பட்ட தொன்றாகியதாகவும் உள்ளது. எடுத்துக்காட்டாக இதுவரை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வந்த அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி இவ் உதவிகள் அளிக்கப்பட்டதன் பின்னர் அதிகரிப்பைக் காட்டியுள்ளது. அதாவது சுனாமியின் முன் ஒரு டொலரின் பெறுமதி 103 ரூபாவாக இருந் தது. தற்பொழுது 99 ரூபாவாக மாறியுள்ளது.

அடுத்ததாக பெரும் கடன் நெருக்குவாரத்திற்கு உள்ளாகியுள்ள சிறிலங்கா அரசிற்கு ஜப்பான்போன்ற பிரதான கடன் வழங்குனர்களின் இரத்து அறிவிப்பானது பாரிய நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வாய்ப்பை அளித்துள்ளது. இந்த வகையில் சனாதிபதி சந்திரிகா குமார துங்க அரசாங்கத்திற்கு சுனாமி கூட ஒரு வகையில் கைகொடுத்துள்ளது என்றால் அது தப்பில்லை.

ஆனால் சுனாமி பேரலைகள் எத்தகைய பேரழிவுகளை ஏற்படுத்தினாலும் சிங்கள ஆட்சியாளர்கள் எவரும் தமது இனவாத சிந்தனைப் போக்கை மாற்றிக்கொண்டதாகவோ, இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வொன்றைக் காண முற்படுவதற்கான சமிக்ஞைகளோ நடவடிக்கைகளோ தென்படுவதாகவில்லை.

அமெரிக்காவின்பாதுகாப்பு இராஜாங்கச் செயலாளர் கொலின்பவல் "சுனாமி கடற்கொந்தளிப்பில் ஏற்பட்ட பாரிய பாதிப்புக்கள் இலங்கை மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளில் நீண்ட காலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பத்தை தேற்றுவித்துள்ளது" எனத் தெரிவித்த அபிப்பிராயமானது இத்துயர்களையும் பணியில் இருதரப்பும் சேர்ந்து பணியாற்றுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுண்டு என்ற அடிப்படையிலானதேஆகும்.

அதாவது சாதாரண வாழ்வியல் நடைமுறையில் கூட துயர்களில் பங்கெடுப்பதன் மூலமும் முரண்பாடுகள் தீர்க்கப்படுவதுண்டு. அதேபோன்று இனப்பிரச்சினையிலும் விட்டுக்கொடுப்புக்களுடன் நடந்து கொள்வதற்கான தேவைகளை இவ்வனர்த்தம் உருவாக்கியுள்ளதால் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படலாம் என்ற அடிப்படையிலேயே கொலின்பவல் தனது கருத்தைக் தெரிவித்திருத்தல் கூடும்.

ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இத்தகைய சிந்தனைப்போக்கு எதையும் வெளிப்படுத்துபவர்களாகவோ, நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களாகவோ இல்லை. அதாவது சுனாமி பேரலைகளினால் தாக்கப்பட்டுத் தமிழ் மக்கள் பெரும் துன்பம் அடைந்துள்ளபோதும், அவர்கள் தமது இனவாதக் கொள்கைகளைக் கைவிட்டு தமிழ் மக்களுக்கு உதவி அளிக்கவோ, அன்றி இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசியல் தீர்வு முயற்சிகளை முன்னெடுக்கத் தயாராக இருப்பதாகவோ இல்லை. மாறாகத் தமிழ் மக்களுக்குக் கிடைக்கக் கூடிய நிவாரண உதவிகளைத் தடைசெய்வதிலும் அவற்றிற்கு இடையூறு செய்வதிலுமே ஈடுபாடு காட்டுபவர்களாக உள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு சிறிலங்கா அரசிடம் இருந்து உடனடி நிவாரணங்கள் எவையும் வந்து சேரவில்லை என்பதும், இவ் அனர்த்தத்தால் மக்கள் பாதிக்கப்பட்டபோது மீட்புப் பணியில் விடுதலைப்புலிகளும், நிவாரணப்பணிகளில் தமிழர்புனர்வாழ்வுக்கழத்தினருமே முக்கிய பங்காற்றினர் என்பதும் வெளிப்படையானது. அத்தோடு தமிழ்மக்களும் பெரும் பங்களிப்பைச் செய்தனர் என்பதும் உலகமறிந்தது.

இப்பணியானது தனியாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மட்டுமல்ல இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியிலும் மேற்கொள்ளப்பட்டது.

இந் நிலையில் பெருமளவு வெளிநாட்டு நிவாரணப்பொருட்கள் வந்து குவிந்தபோதும் சிறிலங்கா அரசாங்கம் தமிழர் தாயகப்பகுதிகளில் ஏற்பட்ட அழிவுகளுக்கு ஏற்ப அவை தமிழ் மக்களுக்கு சென்றடையக் கூடிய வழிவகைகளைச் செய்யத்தயாராக இல்லை. மாறாக தமிழ்மக்களுக்குக் கிடைத்து வந்த நிவார ணப்பொருட்களையும் கிடைக்கக் கூடிய நிவாரணப்பொருட்களுக்கும் இடையூறு செய்யும் வகையிலேயே அரசு நடந்துகொள்கின்றது. அரசின் இந் நடவடிக்கைகள் பின்வருமாறு அமைந்திருந்தன.

1) தனியார், அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கூட அரசசெயலணிக் குழு மூலமாக மேற்கொள்ளப்படவேண்டும் என நிவாரணப்பொருட்களை அரச மாவட்ட செயலகங்களில் குவித்தது. குறிப்பாக திருமலை, அம்பாறை மாவட்டத்தில் இது ஒரு பறிப்புப் போன்றதாகவே இருந்தது. இதன் போது இவற்றின் விநியோகத்தின்போது தமிழர் இதில் புறக்கணிக்கப்பட்டனர். பெருமளவு பொருட்கள் மோசடியும் செய்யப்பட்டன.

2 நிவாரணப்பணி நடவடிக்கைகளை ஆயுதப்படைத்தரப்பினரிடம் ஒப்படைத்ததன் மூலம் நிவாரணப்பணியில் ஈடுபட்ட அரசசார்பற்ற நிறுவனங்களை வெளியேற்றுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்கக் கூடியதான உதவிகளை மட்டுப்படுத்தியும், இல்லாமலும் செய்தல்.

3 தழிழர் பிரதேசங்களில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்துவரும் நிவாரணப்பொருட்கள் மீது அவை விடுதலைப்புலிகளுக்குக் வருவதாகக் கூறி தீவிர பரிசோதனைகளை மேற்கொள்ளுதல்.

4 அனர்த்தங்களைப் பார்வையிடவரும் வெளிநாட்டு அரச மற்றும் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், மற்றும் ஆட்சித் தலைவர்களின் பயண நிகழ்ச்சிநிரலில் தமிழர் தாயகப் பிரதேசங்களை ஓரம்கட்டுதல், இதன் மூலம் அவர்கள் பிரதேசங்களைப் பார்வையிடுதலைத் தவிர்த்தல் அன்றித் திசை திருப்பிவிடுதல்.

இந்த வகையில் தமிழர் தாயகப்பகுதியில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வுப் பணிகளுக்கு முட்டுக்கட்டைபோடுதல் அன்றி திசை திருப்பிவிடுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் அரசாங்கம் சர்வதேச ரீதியில் கிடைக்கப்பெறும் நிவாரணப்பொருட்கள் மற்றும் உதவித்தொகைகள் என்பவற்றை தமிழ்மக்களுக்கும் பகிர்ந்தளிக்கும் என எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்? ஏற்கனவே சனாதிபதி சந்திரிகா விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள விடுதலைப்புலிகள் இயக்கம் வெளியாரை அனுமதிப்பதில்லை எனவும், கொண்டு செல்லப்படும் நிவாரணப் பொருட்களை திருப்பி அனுப்பி விடுவதாகவும் பொய்யான பிரச்சாரம் ஒன்றைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இது அவர் தமிழர் தாயகப்பகுதியை புறக்கணிப்புச் செய்வதற்கான முன்னறிவிப் பாகவே கொள்ளத்தக்கது.

இதேசமயம் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முக்கிய பங்காளிகளான ஜே.வி.பி , எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளுடன் இணைந்து அரசாங்கம் புனர்வாழ்வுப்பணிகளை மேற்கொள்ள வேண்டும் என யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்த கருத்துத்திற்குத் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. அதாவது தமிழ் மக்களுக்கு இயற்கையாக ஏற்பட்டுவிட்ட பேரனர்த்தத்தின் போது கூட ஆட்சியாளர்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபடத் தயாராக இல்லை.

இத்தனைக்கும் அமெரிக்கரை ஏகாதிபத்தியவாதிகள், ஆக்கிரமிப்பாளர்கள், வெள்ளைத்தோல்க்காரர்கள் என வாய்க்கு வந்தபடி திட்டித்தீர்த்த ஜே.வி.பியினர் தற்பொழுது அமெரிக்கா நிவாரணப்பணிகள் என்ற ரீதியில் தனது இராணுவத்தை அனுப்பிவைத்துள்ள நிலையிலும் அது குறித்து மௌனம் சாதிக்கின்றனர். கருத்துக் கூற மறுக்கின்றனர்.

அதாவது சனாதிபதி சந்திரிகாவும் சரி அவரது கூட்டாளிகளான ஜே.வி.பியினரும் சரி,யாருடனும் சரி, எவற்றுடனும் சரி தமது தேவைகருதி விட்டுக்கொடுப்புச் செய்யவும், மண்டியிடவும் தயாராக இருப்பினும் தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்கவோ அன்றி சேர்ந்து பணியாற்றவோ அன்றித் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணவோ தயாராக இல்லை.

இந்நிலையில் வெளிநாடுகளினால் குவிக்கப்பட்டுள்ள பெருமளவு நிதி ஒருபுறத்தில் தென்னிலங்கைக்கும், ஒரு சிறுதொகுதி தமிழர் தாயகத்திலுள்ள தமிழர் அல்லாதவர்களுக்கும் என ஒதுக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. இது அவர்களின் அரசியல் தேவைக்கானது. ஆனால் இவ் ஒதுக்கீடுகளும்கூட அம்மக்களை முழுமையாகச் சென்றடையுமா? என்பது கேள்விக்குரியதே.

ஏற்கனவே உடனடி நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் தென்னிலங்கையில் பெரும் முறைகேடுகள் இடம்பெற்றதாகவும், பெருமளவுபொருட்கள் பாதிக்கப்படாதவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் பல அதிகாரிகள் பொருட்களில் பெரும் பகுதிகளைச் சுருட்டிக் கொண்டு விட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இத்தகவல்கள் தமிழர் தரப்பால் வெளியிடப்பட்டவையுமல்ல.

ஆகையினால் எதிர்காலத்தில் பெரிய தொகை நிதி ஒதுக்கப்படுகையில் அதில் பெருமளவு மோசடிகளுக்கும் இடமுண்டு. ஏற்கனவே சிறிலங்காப் பொலிஸ் துறையும் மற்றும் நீதித்துறை ஊழல் மலிந்ததென பெயர் பெற்றிருக்கையில் இவ் இயற்கை அனர்த்தமானது சிறிலங்கா நிர்வாக அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் அத்தகையதொரு பெயர் வாங்கும் பெரியதொரு வாய்ப்பை வழங்கியுள்ளதெனலாம்.

இவை ஒருபுறம் இருக்க மனிதாபிமான ரீதியிலான உதவி என்ற ரீதியில் சிறிலங்கா வந்துள்ள வெளிநாட்டு இராணுவத்தினர் மீட்புப்பணி மற்றும் நிவாரணப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆனால் இவர்களின் இப்பணியானது தனியாக இவ் இயற்கை அனர்த்தத்தினால் இலங்கை மக்களுக்கு குறிப்பாக தென்னிலங்கை மக்களுக்கான உதவிகளை வழங்குவதா? அன்றி இவ்வனர்த்தத்தினால் அழிவுற்றுள்ள சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பையும் கட்டி எழுப்ப உதவி புரிவதா? என்ற கேள்வியும் உள்ளது.

ஏனெனில் வெளிநாட்டு இராணுவத்தினரின் சில நடவடிக்கைகளும் சிறிலங்கா அரசாங்கத்தின் செயற்பாடுகளும் பொருத்திப் பார்க்கத்தக்கவையாகவே உள்ளன. எடுத்துக்காட்டாக மீட்புப் பணிக்கென வந்துள்ள சில இராணுவ க்கடற்படைப்பிரிவுகள் அழிவுற்ற சிறிலங்காக்கடற்படை மற்றும் இராணுவத்தளங்களிலும், மீட்புப்பணிகளிலும் புனரமைப்புப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை சனாதிபதி சந்திரிகா புனர்வாழ்வுப்பணிகளுக் கான நடவடிக்கைகளை சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பிடம் ஒப்படைத்ததில் இருந்து வெளிநாட்டு இராணுவத்தினருடன் சிறிலங்கா இராணுவத்தினரும் இணைந்து செயலாற்றும் சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்துள்ளார். இந்த வகையில் வெளிநாட்டினரின் நிவாரணப்பணி, புனரமைப்பு உதவிகள் தமிழர் தரப்பிற்குக் கிட்டாத போதும் சிறிலங்கா ஆயுதப்படைக்கும் அது உரியதானதாகவே உள்ளது.

இத்தகையதொரு நிலையில்-அதாவது ஒருபுறத்தில் வெளிநாட்டுக்கடன் சுமையிலிருந்து விடுதலை பெற்று வெளிநாட்டுச் செலாவணிக் கையிருப்பு சற்று அதிகரித்த நிலையிலும், சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பும் வெளிநாட்டினரின் மீட்பு, நிவாரண பணி நடவடிக்கையின் மூலம் புனரமைக்கப்படும் நிலையும் உருவாகும் போது-மறுபுறத்தில் சுனாமி அனர்த்தம் என்ற பேச்சும் படிப்படியாகக் குறைவடைந்து செல்லும் நிலையில் சிறிலங்கா அரசாங்கமும் மீண்டும் ஒரு போருக்கு தன்னைத் தயார்படுத்திக் கொண்டுவிடும். சுமார் ஆறுமாத காலத்தில் இத்தகையதொரு சூழ்நிலை உருவாகும் என எதிர்பார்க்கலாம். ஏனெனில் சனாதிபதி சந்திரிகா ஆறுமாத காலத்துக்குள் புனர்வாழ்வுப்பணிகள் முற் றுப்பெற்றுவிடும் என்கிறார். இந்தவகையில் சுனாமி அனர்த்தம் கூட சந்திரிகா குமாரதுங்க அரசிற்கு வாழ்வளித்துள்ளது என்றே கொள்ளலாம்.


ஜெயராஜ்

# கனேடிய படையினரும் இலங்கை வருகை

கனடா நாட்டின் விமானப் படையினரும், கடற்படையினரும் விசேட விமானமூலமும் கடற் படைக் கப்பலிலும் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கனடா அரசு அறிவித்துள்ளது. இவர்கள் இலங்கையில் அழிந்து போன பிரதேசங்களைப் புனரமைப்பார்கள் என்றும் இலங்கையின் அரசியலில் தலையிடப் போவதில்லை என்றும் கனடா அறிவித்துள்ளது. கனேடியக் கடற்படையினர் கிழக்குப் பிராந்தியத்திலும் தெற்குப்பகுதியிலும் முகாமிட்டு மருத்துவ வசதிகளைப் பொதுமக்களுக்கு வழங்குவார்கள் என்றும் கனடா அறிவித்துள்ளது. கனடாவிலிருந்து அனுப்பப்படும் கப்பலில் 40 மீட்புப்பணியில் ஈடுபடும் வாகனங்களும் பல இராணுவ தளபாடங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் மீட்பு நடவடிக்கைகளுக்காக தமது படையினரையும், இராணுவத்தளபாடங்களையும் இலங்கைக்கு அனுப்பிவருகின்றமை தெரிந்ததே.

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்

| முத்தாய் | | வித்தாக |
|---|---|---|
| 20 - 04 - 1977 |  | 09 - 01 - 1997 |

### வீரவேங்கை துளசிமாறன்

[செகராசசேகரம் தர்மசீலன்]

உதிரத்து உறவுகளைத் தவிக்கவிட்டு
உள்ளத்தில் உன்னத இலட்சியமெடுத்து
உறுதியுடன் களமாடிய தர்மா!
மண்விட்டு நீதான் உதிர்ந்து
விண்தொட்ட காலம் ஆண்டெட்டு ஆனாலும்
எம் இதயக் கோவிலில் -நீ
உறங்காத உயிர்ப்பூவாய் என்றும் மலர்ந்திருப்பாய்

ஆனையிறவு - பரந்தன் பெருஞ்சமரில் இவருடன் வீரகாவியமான ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.


என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

துளசிமாறன் வைத்தியசாலை,
24 கனகபுரம்,
கிளிநொச்சி.

துன்னாலை கமம்,
7ஆம் வாய்க்கால்,
கிளிநொச்சி.

(5536)

## 16ஆவது பிறந்த தினமும் கண்ணீர் அஞ்சலியும்

| வந்துதிப்பு | | பறித்தெடுப்பு |
|---|---|---|
| 09 - 01 - 1989 |  | 26 - 12 - 2004 |

### ரஞ்சன் மகேஸ்வரி

[செல்வபுரம் முல்லைத்தீவு]

தாயகத்தை உலுக்கிய பேரலையின் அனர்த்தத்தில் காவு கொள்ளப்பட்ட எமது மாணவி ரஞ்சன் மகேஸ்வரி

நாற்று மேடையில்
வளரும் பூச் செடியே -நீ
நாளை மலர்வாய் என்றே இருந்தோம்
நேற்றுச் சென்றாய் நாளை வருவதாய்
நாமும் இருந்தோம் நல் வரவிற்காய்!
ஆனால்.....
தோற்றுப் போனோம்
நீ நடந்த தடம்
உன் சிரித்த முகம்
நீ படித்த பள்ளி
உன்னை வளர்க்கும் இல்லம்
எல்லாமே தோற்றதம்மா!
மகேஸ்வரியே! நீ மகா ஈஸ்வரி
நீ அலை முகிலில் மறைந்த பௌர்ணமி
மீண்டும்....
நீ வானில் ஒளிர்வாய் - உந்தன்
ஒளியால் எங்கள் இல்லம் மிளிரும்

*உன் பிரிவால் துயருறும் E.S.D.C நிறுவன*
**பணிப்பாளர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.**
**அறிவியல் நகர் கிளிநொச்சி.**

(5535)

## பாடசாலை நூலகங்களுக்கான இலவச பாடப்புத்தக விநியோகம்

டிசம்பர் 26, 2004 இல் ஏற்பட்ட கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பாடசாலை மாணவர்களுக்கு உதவுமுகமாக (தரம் 1 தொடக்கம் உயர் தரம் வரையான) பாடப்புத்தகங்கள், பயிற்சிப் புத்தகங்கள், உசாத்துணை நூல்கள் போன்றவற்றை பாடசாலை நூலகங்களுக்கு இலவசமாக வழங்கவுள்ளோம். பாதிக்கப்பட்ட பாடசாலை அதிபர்கள் தங்களது பாடசாலையில் உள்ள தரங்களின் (வகுப்புகள்) விபரங்களை சனவரி 30,2005 இற்கு முன்னர் எமக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தினால் காலதாமதமின்றி விநியோகம் செய்யக்கூடியதாக இருக்கும்.

லங்கா புத்தகசாலை (தொலைபேசி-234192) கொழும்பு-12

*தொடர்புகட்கு:- சிறிலங்கா புத்தகசாலை*
*234,கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்,*
*தொலைபேசி-021-2222573*

(சி.11182)

## வீரவணக்கம்



தோற்றம் 24.07.1972
வீரச்சாவு 09.01.1997

ஒன்பது ஆண்டுகள் சென்றாலும்
அழியாது உன் நினைவு
செல்வமே [அண்ணா]...
புதியதொரு ஆண்டு பிறந்தாலும்
புதையாது உன் நினைவு
புதியவனே...
எம் ஜீவன் உள்ளவரை விலகாது
உன்நினைவு செல்வமே...

### லெப்.கதிர்ச் செல்வன்

**சதாநந்தம்- புஸ்பராசா**

5ஆம் வட்டாரம் குழுளமுனை முள்ளியவளை


சம்பவம்:- ஆனையிறவு பரந்தன் இராணுவத் தளங்கள் மீதான தாக்குதலில்

இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர்களையும் நினைவு கூரு கிறோம்
09.01.2005 அன்று இவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(5091)

## நெஞ்சை விட்டகலாத ஆண்டுகள் எட்டு



### மேஜர் விமலன்

(விசேட வேவுப் பிரிவு)

செல்வரத்தினம் ஜெயரூபன் (ரூபன்)

ஜெயந்திநகர், கிளிநொச்சி
(ஆனையிறவு படைத்தளங்கள் மீதான தாக்குதலில்)

மழலையாக ———— 1973.09.18
மாவீரனாக ———— 1997.01.09

முகமறியா மாமா உனை
கருவிலேயே நானறிவேன்
என் தாயின் கண்ணீரூடே... இப்போ
உன் நிழலுருவை காண்கின்றேன்.
மழலை நான்
நிதமும் என் கண்மணிகளூடே..

தகவல்:-
சகோதரி திருமதி ஜீவபாலன்,
-ஜெயகௌரி,
இல-12 ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

மருமகன்
ஜீ.பிரணவன்
மற்றும்
குடும்பத்தினர்.

(5462)

# ஈரானிடம் திரவ எரிவாயு வாங்க இந்தியா ஒப்பந்தம்

ஈரானிடம் இருந்து 50 இலட்சம் டன் திரவ நிலை எரிவாயுவை (எல்என்ஜி) இந்தியா விலைக்கு வாங்குகிறது. இந்த எரிவாயு 25 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

இதற்கான உடன்பாடு இருநாடுகளுக்கும் இடையே வெள்ளிக்கிழமை கையெழுத்தானது என ஈரான் எண்ணெய் துறை அமைச்சர் பிஜன் ஷாங்னே தெரிவித்தார்.

எரிவாயு விநியோகம் 2008-09 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கும். ஏற்கனவே இந்த உடன்பாடு தொடர்பாக இருதரப்பும் விரிவான ஆலோசனைகளை நடத்தியுள்ளன என்று எண்ணெய் இயற்கை எரிவாயு ஆணையத்தின் (ஓஎன்ஜிசி) தலைமை நிர்வாக இயக்குனர் சுபீர் ரகா தெரிவித்தார்.

யாதவரான் என்ற இடத்தில் ஈரான் பெரிய அளவில் எண்ணெய் வயலை நிறுவ உள்ளது. இதற்கான முதலீட்டில் இந்தியாவுக்கு 20 சதவீதம் ஒதுக்கப்படும். இதற்கும் இந்த உடன்பாடு வழி செய்துள்ளது.

சீனா 50சதவீதம், ஈரானின் தேசிய எண்ணெய் நிறுவனம் 30 சதவீதம் முதலீடு செய்யும். இந்த எண்ணெய் வயலை நிர்வகிக்கப்போவது சீனாவின் சினோபெக் நிறுவனமாகும். தினசரி 3இலட்சம் பீப்பாய் எண்ணெய்யை உற்பத்தி செய்யும் திறன் பெற்றதாக இந்த வயல் இருக்கும்.



தமிழகத்தில் சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து பிரதமர் மன்மோகன் சிங்கிடம் விளக்குகிறார். முதல்வர் ஜெயலலிதா. கிண்டி ஆளுநர் மாளிகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆலோசனையின் போது உடன் (வலமிருந்து) மத்திய அமைச்சர்கள் தயாநிதி மாறன், சரத்பவார்.

## ரூபா.5000 கோடி இந்திய ரூபாய் செலவில் தமிழக கடற்கரைகளில் தடுப்புச் சுவர்

### மன்மோகன்சிங் உறுதி



சுனாமியால் மீண்டும் பேரழிவு ஏற்படுவதைத் தடுக்க தமிழகத்தில் கடற்கரை நெடுகிலும் ரூ.5000 கோடியில் தடுப்புச் சுவர் கட்டவேண்டும் என்று பிரதமர் மன் மோகன் சிங்கிடம் முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்தார்.

இக்கோரிக்கைக்கு உதவுவதாக பிரதமர் உறுதியளித்தார். அத்தோடு உலக வங்கி அல்லது ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவி மூலம் இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு உதவி செய்யும் என்றும் கூறியுள்ளார்.

# காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்குதல்; 5 பேர் பலி

காஷ்மீர் மாநிலத்தில் வருமான வரி அலுவலகத்தில் புகுந்து தற்கொலைப்படை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். இராணுவத்திற்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 5 பேர் கொல்லப்பட்டனர்.


காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் எல்லைப் பாதுகாப்புப் படையின் முகாம் அருகே வருமான வரித்துறையின் 3 மாடிக் கட்டடம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் பிற்பகலில் 50 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் அங்கு பணியில் ஈடுபட்டு இருந்தனர். மத்திய ரிசர்வ் பொலிஸ் படைவீரர்கள் சிலர் அந்த அலுவலகத்தைச் சுற்றி காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் பிற்பகல் 3.50 மணியளவில் தீவிரவாதிகள் 2 பேர் வருமான வரி அலுவலகத்திற்குள் திடீரென்று அதிரடியாகப் புகுந்துவிட்டனர். துப்பாக்கி யால் சரமாரியாகச் சுட்டும், வெடிகுண்டுகளை எறிந்தும் பதட்டத்தை ஏற்படுத்திய அவர்கள், அந்த பரபரப்புக்கு இடையே வருமான வரி அலுவலகத்தில் புகுந்தார்கள்.

தீவிரவாதிகளின் இந்தத் திடீர் தாக்குதலை ரிசர்வ் பொலிஸ் படை எதிர்க்கவில்லை. ஆனாலும் அவர்கள் மின்னல் வேகத்தில் சுதாரித்துக்கொண்டு திருப்பித் தாக்கினார்கள். இரு தரப்புக்கும் இடையே பயங்கர துப்பாக்கிச் சண்டை நடந்தது.

இதற்கிடையே தீவிரவாதிகள் வருமா



னவரி அலுவலகத்திற்குள் புகுந்து அங்குள்ள அறையில் பதுங்கிக் கொண்டு இருந்தனர். அங்கு இருந்து கொண்டே யன்னல் வழியாகப் பொலிசாரை நோக்கிச் சுட்டனர்.

## சுனாமியிலிருந்து ஊர் மக்களைக் காப்பாற்றிய பெண்மணி

கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் சென்னையில் சுனாமி அலைகள் தாக்கியது. இந்த செய்தி டி.வி. யில் ஒளிபரப்பப்பட்டது. இதைப் பலரும் பார்த்தனர். ஒரு பெண்மணி மட்டும் இந்தச் செய்தியைப் பார்த்து உஷாரானார். பக்கத்துக் கிணறு, குளம் ஆகியவற்றில் தண்ணீர் வளக்கத்திற்கு மாறாக அதிகமாகக் கிடப்பதையும் கண்டார். இதனால் ஏதோ ஆபத்து என்பதை உணர்ந்த அந்தப் பெண்மணி கடற்கரையை நோக்கி ஓடினார். அதற்குள் கடலில் அலைகள் பெரிதாக வரத் தொடங்கின. இதைக்கண்ட அவர் தன் கிராமமக்களை நோக்கி ஏதோ ஆபத்து வரப்போகிறது எல்லாரும் வீட்டைவிட்டு ஓடுங்கள் எனக் கத்தினார். இதைக்கேட்ட கிராம மக்கள் கையில் கிடைத்த பொருட்களுடன் வீட்டைவிட்டு ஓடினர். அதற்குள் சுனாமி அலைகளும் வீட்டிற்குள் புகுந்துவிட்டன. கிராம மக்கள் உஷார் நிலையில் இருந்ததால் அலையிலிருந்து தப்பியோடிவிட்டனர். அதன் பிறகு சுனாமி அலைகள் வீடுகளைத் தாக்கி அழித்தன.

கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளெல்லாம் அந்தப் பெண்மணியின் குரலைக்கேட்டு ஓடிவிட்டனர். இல்லையென்றால் அந்தக் கிராமத்திலிருந்து 100 பேர் இறந்திருப்பார்கள். எனினும் அந்தக் கிராம பகுதியில் 44 பேர் சுனாமி அலைக்குப் பலியாகிவிட்டனர்.

கிராம மக்களைக் காப்பாற்றிய பெண்மணியின் பெயர் மணிமேகலை (வயது-50). இவர் அந்த ஊரின் பஞ்சாயத்து தலைவராகவும் உள்ளார். காவேரி பட்டினம் உட்பட 10 கிராமங்களைச் சேர்ந்த பஞ்சாயத்திற்கு இவர் தலைவராக உள்ளார்.

## அசாம் மாநிலத்தில் தீவிரவாதி என்று நினைத்து இராணுவ அதிகாரி கொலை;தவறான தகவலால் விபரீதம்

அசாம் மாநிலம் திப்ருகர் மாவட்டம் சாமுகோணி கிராமத்தில் பதுங்கி இருந்த உல்பா தீவிரவாதியைப் பிடிக்க இராணுவ மேஜர் முகேஷ், சிப்பாய் பிகாஷ் ஆகியோர் சென்றனர்.இவர்கள் கூட்டுப்படைத் தலைமையிடம் தகவல் தெரிவிக்கவில்லை. ஆனால் சாமுகோணி கிராமத்தில் தீவிரவாதிகள் துப்பாக்கி முனையில் மிரட்டி மக்களிடம் பணம் பறிப்பதாகப் பொலிசாருக்குத் தக[illegible] கிடைத்தது.

உடனே பொலிஸ் குழு, இராணுவ துணை நிலை இராணுவத்தைச் [illegible]சேர்ந்த கூட்டுப்படை யினர் அங்குசென்று [illegible]ணுவ மேஜர் முகேஷ், சிப்பாய் பிகாஷ் ஆகியோரைத் தீவிரவாதிகள் என்று நினை[illegible] சுற்றி வளைத்தனர்.அப்போது இராணு[illegible] மேஜர் முகேஷ் துப்பாக்கியால் வானை நோக்கிச் சுட்டார். இதையடுத்து கூட்டுப்படையினர் அவர்கள் மீது சுட்டனர். இதில் இராணுவ மேஜரும், சிப்பாயும் பலியானார்கள்.

அவர்கள்அணிந்திருந்த சட்டையில் உள்ள பையை கூட்டுப்படையினர் சோதனையிட்டனர். அப்போது இருவரிடமும் இராணுவத்திற்கான அடையாள அட்டை கிடைத்தது. அதை சரி பார்த்தபோது 2பேரும் இராணுவ வீரர்கள் என்பது தெரியவந்தது. இது தொடர்பாக பொலிஸ் அதிகாரியொருவர் கூறும்போது; பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், கூட்டுப்படைகளுக்கும் இடையே சரியான முறையில் தகவல் பரிமாற்றம் செயய்யப்படாததால் தான் இந்தத் தவறு நடந்துவிட்டது என்று தெரிவித்தார்.

## நடிகர் சரத்குமார் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலூர், நாகை மற்றும் பாண்டிச்சேரி மக்களுக்கு ரூ.7 இலட்சம் மதிப்பிலான உதவிப் பொருட்களை வழங்கிய நடிகர் சரத்குமார் மேலும் அந்தமான் நிக்கோபர்,இலங்கைக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குகின்றார்.

சுனாமி கடல் அலைகளால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு உதவ சரத்குமார் எம்.பி. பிரதமர் நிவாரண நிதிக்கு ரூ.14 இலட்சம் அளித்துள்ளார்.மேலும் துபாயில் உள்ள இந்தியன் அசோசியேஷன் தலைவரும், சரத்குமாரின் நண்பருமான கே.குமார் மற்றும் துபாய் வாழ் இந்திய நண்பர்கள் பலரும் இணைந்து நிதி திரட்டி வருகின்றனர். பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதி மீனவர்களுக்கு உதவ மீன்பிடி வலைகள்,படகுகள், அவர்கள் வீடுகட்ட தேவையான உதவிகளையும் செய்ய துபாய் இந்திய அசோசியேஷன் திட்டமிட்டுள்ளது.

அதன் தலைவர் குமார் தலைமையிலான குழு சரத்குமாருடன் இணைந்து பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து உதவிகளை வழங்க உள்ளனர். ஏற்கனவே சுனாமியால் பாதிக்கப்பட்ட சென்னை நாகை, காரைக்கால், கடலூர், பாண்டி பகுதிகளுக்கு ரூ.7 இலட்சம் செலவில் அரிசி, துணி வகைகள் மற்றும் மருந்துப் பொருட்களை சரத்குமார் வழங்கியுள்ளார்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கியவர்கள் விபரம்

Ramahrishna Mission-colombo,மக்கள் கொட்டகல பிரதேசம்-நுவரெலியா, நியுபீமிகா இரட்டைப்பாலை மக்கள்-கண்டி, S.கமலகுமார்-கொழும்பு, சிறிபவன்-அன்னலக்ஷ்மி- புதுக்குளம்- ஒட்டுசுட்டான், ரவீந்திரராஜ் (லண்டன்) தனியார், ச.தேவராஜா (சுவிஸ்) மகாராஜா (லண்டன்), பெருமாள் ரவீந்திரன் 7 3/1-ரமணகிரி கொலனி, சீன்குறாப் பூண்டுலோயா ஒக்ஸ்பாம்-வவுனியா, சிறுவர் பாதுகாப்பு- இலங்கை, ப.பத்மநாதன் (தனியார்) வல்வெட்டித்துறை, டனிஸ் அகதிகள் பேரவை-வவுனியா, டயமக மேக்கு-வடாம்பிரிவு, போறூட்-முல்லைத்தீவு மாவட்டம்.

**TRO,**பட்டகணு புவலர்ஸ் (கொ-11), **P.S** அப்துல்லா (வவுனியா), பழையசோனகத்தெரு ரேடேர் நிறுவனம் (கொ-12), வர்த்தகர்சங்கம் பழையசோனகர் தெரு (கொ), பொறியியல் பீடம் பேராதனை, கொழும்பு பல், யாழ். விற்பனைகள் பிரதிகள் ஒன்றியம், சுபிகரன் பரராஜசிங்கம்-கொழும்பு, செல்வரட்ணம் நாராயணதாஸ்-கொழும்பு, பொலிஸ் நிலையம்-வவுனியா, இலங்கை போக்கு வரத்துச்சபை-வவுனியா, ஒஸ்போன் **R.D**-கற்றன், நகரசபை-வவுனியா, வளர்மதி முன்னேற்ற கழகமும் நிறைவாழ்வும்- கொக்குவில், மிடில்சர் எக்ஸ்போட்-தலவாகலை, தனியார் வத்தளை கொழும்பு, கொட்டாஞ்சேனைஸ்ரீவரதர் ஆலயமும் பொது மக்களும், சென்அன்ரியூஸ் பொதுமக்கள் -கொட்டகல, தேசிய வீடமைப்பு அதிகாரசபை, வவுனியா, EURO Lanka-Colombo, தனியார்-கொழும்பு, பொதுமக்கள், இலங்கை கலாச்சார நலன்கருதி சங்கம்-லயகம அக்கரபத்தன, வலயக்கல்வி அலுவலகம்-துணுக்காய் மாங்குளம், இலங்கை கலாச்சார நலன்புரிச்சங்கம், கிராமமக்கள்-வத்தன போகாவத்த, லயன்ஸ் கிளப்-கொழும்பு, **R.G**.Agency-கொழும்பு-11 , பூந்தோட்டம் இளைஞர்-வவுனியா, Miss.G.Balachandran- MR kisathy, MR.Mike wardlow And Ariends. in.England, EBE Ngsar Prmyer Church-srilanka, அரசியல்துறை-மல்லாவி, பாராளுமன்ற உறுப்பினர் திரு.மாவை சேனாதிராசா அவர்கள் ஊடாக திரு.தங்கராசா (ஜேர்மன்) திரு.பாலசுப்பிரமணியம் (கொழும்பு), பி.ஜெகதாஸ்-கந்தரோடை மேற்கு சுன்னாகம், Campus Crusacle far Christ srilanka, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை-கொழும்பு, தீபா வீடியோ விசன்-சந்தைவீதி கற்றன், World vision- Mulalithivu , பொன்னம்பலம் சந்திரசேகர், செல்லையா பரமசிவம்-வவுனியா, சக்தி மண்டபம்-கற்றன், S.கனகரட்ணம்-கொழும்பு, பிறஸ்லே லங்கா லிமிட்டட்- கொழும்பு, Canaan Peace Prayer Mission,சோமசுந்தரம்,திலகசேகரம் பூதன்வயல்-முள்ளியவளை, அழகர் சங்கம் (முள்ளியவளை), விசுவமடு பிரதேசசங்கம் வன்னிவிளாங்குளம்- கிராமஅபிவிருத்திசங்கம் ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலய திருப்பணிச்சபை, இந்து இளைஞர் மன்றம்-கொழும்பு, கெயார் முல்லைத்தீவு, சேவாலங்கா பவுண்டேசன்- வவுனியா, போரூட்-இலங்கை, தங்கவேலாயுதம் ஜெயரூபி-வவுனியா, பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்-வவுனியா, நுவரெலியாப் பிரதேசசபை, புஸ்பமலர் (தனியார்), யுனிசெப் (சி.சி), யுனிசெப், குறட்டிக்கிளப் (டுவல்க்கோடர்), நகரப்பள்ளிவாசல் நிர்வாக சபை, ஈசன் ராமசாமி பசளைக்கடை, பெஞ்சட்லோகுலோறன்ஸ் பொதுமக்கள், யோகரட்ணம் (தனியார்), இலங்கை சமாதான நீதவான் சங்கம், கிளாடிவிசன்-கொபவற்தலாவ கற்றன், ஸ்ரீமுருகன் ஆலய நிர்வாகசபை- தில்லையடி, புத்தளம், து.ரபேசன்-வெள்ளவத்தை, க.யோகநாதன்-லண்டன், ஆ.சபாநாதன் (தனியார்) சிற்றிரேடிகோப்ரேசன் வவுனியா), S.T.N.நடராஜா-கொரவப் பொத்தனைவீதி வவுனியா, க.பவானந்தன் (.S.K.கனகரட்ணம் அன்சன்ஸ்) வவுனியா, க.பரதலிங்கம்-பூந்தோட்டம் வவுனியா, உதயசீலன்-பிற்றகந்த தோட்டம் மாத்தளை, ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம் (அப்புகஸ்யாய நாளாந்த) மாத்தளை, மேல்மருத்துவர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி, குருகம எஸ்ரேட் முனுத்துவாவ-கண்டி, சக்தி T.V, சக்தி , F.M. யாழ்ப்பாணப் பிரிவு.

## சுனாமி ஒரு நாள் போட்டிக்கு ஐ.சி.சி அதிகார பூர்வ அங்கீகாரம்




சுனாமி நல நிதிக்காக நடத்தப்படவுள்ள ஒரு நாள் போட்டிக்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) அதிகாரபூர்வ அங்கீகாரத்தை அளித்துள்ளது.சுனாமி நல நிதிக்காக இரண்டு ஒரு நாள் போட்டித் தொடர் நடைபெறவுள்ளது. இதன் முதல் ஒரு நாள் போட்டி 10ஆம் திகதி மெல்பேர்ன் நகரில் நடைபெறவுள்ளது.

இந்த ஒரு நாள் தொடரில் பிறையன் லாரா, டெண்டுல்கர், பொண்டிங், ஜெயசூரியா போன்ற நட்சத்திரங்கள் பலர் கலந்து கொள்கின்றனர்.

இந்தத் தொடரில் ரிக்கி பொண்டிங் தலைமையிலான உலக 11 பேர் அணியும், சௌரவ் கங்குலி தலைமையிலான ஆசிய 11 பேர் அணியும் மோதவிருக்கின்றன.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனரமைக்க எம்.சி.சி தொடர் உதவி வழங்க உறுதி



மெல்பேர்ன் கிரிக்கெட் சபை(எம்.சி.சி) சுனாமி அலைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்புக்கென தொடர் உதவிகளை வழங்குவதாக அறிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக காலியில் உள்ள சர்வதேச கிரிக்கெட் அரங்கை புனரமைக்கவென 25 ஆயிரம் ஸ்ரேலிங்பவுணை கொடுத்துதவும்.

இதனைவிட மேலும் நிதிகளைப் பெற்றுக் கொள்ள பல போட்டித் தொடர்களை உள்ளூரில் நடத்தவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் பல அமைப்புக்களுக்கும் ஆதரவு வழங்கவும் முன்வந்துள்ளதாக மெல்பேர்ன் கிரிக்கெட் சபை செயலர் றோஜர்நைட் கூறியுள்ளார்.

அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியதும் பல ஆயிரம் பேரை பலி கொண்டும் இலட்சக்கணக்கானோரை அகதிகளாக்கியும் வைத்துள்ள சுனாமி பேரலை அனர்த்தத்துக்கு உதவுவதில் தான் மகிழ்ச்சியடைவதாகவும், இங்கிலாந்து வீரர்கள் ஏற்கனவே உதவிகள் வழங்கியிருப்பதையும் தெரிவித்த அவர். காலி மைதானம் சிறிலங்கா அணியின் முதலாவது சர்வதேச வெற்றிக் களம் (1998) என்று கூறிய அவர் அதனை திருத்தியமைக்க 1.6 மில்லியன் பவுண் தேவைப்படும் என்றும் குறிப்பிட்டார்.


## சுனாமி நல நிதி கிரிக்கெட் போட்டி மூன்றே நாளில் டிக்கெட்டுகள் தீர்ந்தன

உலக 11 பேர், ஆசிய 11 பேர் அணிகளுக்கு இடையே மெல்பேர்னில் நாளை சுனாமி நல நிதி கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது.

அதற்கான டிக்கெட்டுக்கள் அனைத்தும் மூன்றே தினங்களில் விற்றுத் தீர்ந்து விட்டன என கிரிக்கெட் அவுஸ்திரேலிய முதன்மைச் செயல் அதிகாரி ஜேம்ஸ் சுதர்லான்ட் தெரிவித்துள்ளார். அது குறித்து ஆச்சரியமும் வெளியிட்டுள்ளார். "வரும் திங்கட்கிழமை நடைபெறும் முதல் போட்டிக்கான டிக்கெட் பொதுமக்களுக்கு இனி கிடைக்காது. கிரிக்கெட்டைப் பார்க்கிறார்களோ இல்லையோ, சுனாமி நிதிக்காகவே பெரும்பாலான அவுஸ்திரேலிய ரசிகர்கள் உடனடியாக டிக்கெட்டுக்களைப் பெற்று விட்டனர். மெல்பேர்ன் கிரிக்கெட் அரங்கில் (எம்.சி.ஜி) மொத்தம்80 ஆயிரம் பேர் அமர்ந்து ஆட்டத்தைப் பார்க்கலாம்.

### சிட்டகொங் டெஸ்ட் போட்டி

## தைபு, சிக்கும்புறா சிறப்பு துடுப்பாட்டம்; சிம்பாப்வே தனது நிலையை ஸ்திரப்படுத்தியது



பங்களாதேஷ் - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் சிட்டகொங்கில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று தனது முதல் இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடும் சிம்பாப்வே அணி நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது 8 விக்கெட்டுக்களை இழந்து 308 ஓட்டங்களைப் பெற்று தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளது.

152 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய சிம்பாப்வே அணித்தலைவர் தைபு, சிக்கும்புறா ஆகியோரின் சிறப்பு துடுப்பாட்டத்தின் உதவியுடன் ஸ்திர நிலையை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் தைபு 92 ஓட்டங்களையும், சிக்கும்புறா 71 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர். ஆட்டமிழக்காது இன்காலா 20ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.பந்து வீச்சில் மொகமட் றபீக் 4 விக்கெட்டுக்களையும், மொரட்சயா 2 விக்கெட்டுக்களையும கைப்பற்றினர். பங்களாதேஷ் தனது முதல் இனிங் சிற்காக அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 488 ஓட்டங்களைப் பெற்றது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.



## தலைவர் பதவிக்கு இன்சமாம் பொருத்தமற்றவர்






அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரை பாகிஸ்தான் இழந்ததை தொடர்ந்து தலைவர் பதவியில் இருந்து இன்ச்மாமை நீக்க வேண்டும் என்று பாகிஸ்தான் முன்னாள் தலைவர் வாசீம் அக்ரம் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியா தோற்கடிக்க முடியாத அணி அல்ல என்று கூறினேன். பாகிஸ்தான் வீரர்கள் சிறப்பாக ஆடுவார்கள் என்று நினைத்து அப்படிக் கூறினேன்.


பாகிஸ்தான் வீரர்கள் போராடவே இல்லை. ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருந்தது. சிறந்த தலைவர் இல்லை. சரியான திட்டம் இல்லை. தலைவர் பதவிக்கு இன்சமாம் தகுதியானவர் இல்லை. அவரை நீக்க வேண்டும்.

அவருக்குப் பதிலாக யூனிஸ்கான் பொருத்தமானவர். யூனிஸ்கானை தலைவராக நியமிக்கலாம். யுகானா சிறந்த துடுப்பாட்ட வீரர்தான். ஆனால் எல்லா நேரத்திலும் அவர் திறமையை வெளிப்படுத்துவதில்லை.

சோயிப் அக்தர் நீண்ட தூரம் ஓடிவந்து பந்து வீசுவது நல்லதல்ல. இதை பயிற்சியாளர் உல்மர் அவருக்கு அறிவுறுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். டெஸ்ட் போட்டியிலும், ஒரு நாள் போட்டியிலும் 400 விக்கெட்டிற்கு மேல் எடுத்த ஒரே வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுனாமி நிவாரண கிரிக்கெட் சோயிப் அக்தர் ஆடவில்லை



சுனாமி நிவாரண கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் வீரர் சோயிப் அக்தர் ஆடவில்லை. அவருக்குப் பதிலாக அப்துல் ரசாக் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுனாமி நிவாரண நிதிக்காக உலக 11 பேர் - ஆசிய 11 பேர் அணிகள் மோதும் இரண்டு ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நடத்தப்படுகிறது. இதன் முதல் போட்டி மெல்பேர்னில் நாளை பகல்-இரவாக நடக்கவுள்ளன.

இந்தப் போட்டிக்கான உலக 11 பேர் அணிக்கு அவுஸ்திரேலிய வீரர் ரிக்கிபொண்டிங்கும், ஆசிய 11 பேர் அணிக்கு இந்திய வீரர் கங்குலியும் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆசிய 11 பேர் அணியில் இடம்பெற்று இருந்த பாகிஸ்தானை சேர்ந்த முன்னணி வீரர் சோயிப் அக்தர் இந்தப் போட்டியில் ஆடவில்லை. தசைப்பிடிப்புக் காரணமாக அவர் இந்தப் போட்டியில் பங்கேற்கவில்லை. அவருக்குப் பதிலாக பாகிஸ்தானை சேர்ந்த அப்துல் ரசாக் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். தோள்பட்டை காயம் காரணமாக கடந்த 5 மாதமாக சிகிச்சை பெற்றுவந்த சிறிலங்காவின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் இந்தப் போட்டியில் ஆடுகிறார்.

ஹொங்கொங்கில் சுனாமி நிவாரணத்திற்கு நிதி வசூல் செய்யப்பட்டது. காட்சி போட்டியில் ஆடவந்த டெனிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் பணம் கொடுப்பதைப் படத்தில் காணலாம்.



## கட்டார் ஓபன் டெனிஸ் இறுதிப் போட்டிக்கு பெரடர் தகுதி



டோகாவில் நடைபெறும் கட்டார் ஓபன் டெனிஸ் இறுதிப் போட்டியில் விளையாட றோஜர் பெரடர் தகுதிபெற்றுள்ளார். அவர் ரஷ்யா வீரர் நிக்கோலே டேவிடன் கோவை 6-3, 6-4 என்ற கோல் கணக்கில் வென்று தகுதி பெற்றார்.

இறுதிப் போட்டியில் ஸ்விஸ் நாட்டு வீரர் ஜவன் ஜூபிசிக்கை சந்திப்பார்.ஜூபிசிக் ஸ்பெயின் வீரர் அல்பட் கொஸ்ராவை 6-3, 7-6 என்ற கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானார்.

## நான்காவது டெஸ்ட் போட்டியில் பிளின்டொப் பங்கேற்பதில் அச்சம்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சகல துறை வீரர் அன்ரு பிளின்டொப் தற் போது சிறு சத்திர சிகிச்சைக்குள்ளாகியிருப்பதால் தென்னாபிரிக்காவுடனான 4ஆவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்பது சந்தேகமாக இருக்குமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.




பிளின்டொப் கடந்த மூன்று வாரங்களில் நடைபெற்ற போட்டிகளில் 123 ஓவர்கள் பந்து வீசியுள்ளார். வேலைப்பளு காரணமாக உடற்தகுதி பற்றி அறிவிக்க வேண்டியிருப்பதாக கூறும் அவர் அநேகமாக நிறைய போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள் காயங்களுக்குள்ளாவது சகஜமே என்றார்.



அவுஸ்திரேலியாவின் பேர்த்தில் ஹொப்மன் கிண்ணத்துக்காக நடைபெற்ற டெனிஸ் போட்டியில் ஆர்ஜன்டீனாவை 3-0 என்ற கணக்கில் சுலோவாக்கியா வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. இங்கு கிண்ணத்துடன் காணப்படும் சுலோவாக்கிய இணை.

## என்னுடைய டெனிஸ் வாழ்க்கையில் 2005 வெற்றி ஆண்டாக இருக்கும்




**லியாண்டர்**

என்னுடைய டெனிஸ் வாழ்க்கையில் 2005 ஆம் ஆண்டு ஒரு சிறந்த வெற்றிகரமான ஆண்டாக இருக்கும் என்று இந்தியாவின் முன்னணி டெனிஸ் வீரரான லியாண்டர் பயஸ் நம்பிக்கை தெரிவித்தார்.

தனது புதிய ஜோடியான ஜிமோன்ஜிக்குடன் (செர்பியா) இணைந்து பல ஏ.டி.பி சுற்றுப் பயணப் பட்டங்களையும், கிராண்ட்ஸ்லாம் இரட்டையர் பட்டங்களையும் கைப்பற்ற முடியும் என்று அவர் உறுதியுடன் இருக்கின்றார். இந்தியாவின் மகேஷ் பூபதி லியாண்டர் பயஸ் ஜோடி இரட்டையர் பிரிவில் இணைந்து ஆடி பல பட்டங்களை வென்று, சில வருடங்களுக்கு முன்பு உலகின் முன்னணி ஜோடியாகவும் திகழ்ந்தனர்.

பின்பு இருவருக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் இருவரும் தனித்தனியே பிரிந்தனர். பூபதி மற்றும் லியாண்டர் பயஸ் இருவரும் தற்போது தனித்தனியே ஜோடிகளை சேர்த்துக் கொண்டு ஆடி வருகின்றனர்.

## சிந்தனைக்கு



சிங்களப் பேரின வாதத்தின் தீவிர வாதப் போக்கில் மாற்றம் ஏற்படும் என நான் என்றுமே நம்பியதில்லை; அந்த மாற்றம் ஏற்படாத வரை தமிழருக்கு நீதி கிடைக்கப் போவதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 09-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## மனிதாபிமானப் பணிக்கு அப்பால்......!

மீட்புப் பணிக்கெனவும் , புனர்வாழ்வுப்பணிக்கெனவும் பல் வேறுபட்ட நாட்டுப்படைப் பிரிவினர் சிறிலங்காவை வந்தடைந்துள்ளனர். இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் , பங்களாதேஷ என்பவற்றைத் தொடர்ந்து பிரிட்டன், கனடா, போன்ற நாட்டுப்படைப்பிரிவைச் சேர்ந்தவர்களும் இதில் பங்கு கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பேரழிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கென அனுப்பப்பட்டுள்ள/ அனுப்பப்படவுள்ள இப்படைப் பிரிவினர் இலங்கையில் எப்பகுதியில் பணியாற்றப்போகின்றனர்? யாருக்கு உதவப்போகின்றனர்? என்பவை ஒருபுறம் இருக்க. அவர்கள் எங்கு பணியாற்றுவதாக இருப்பினும் அது இனப்பிரச்சினை விடயத்தில் பாதிப்பை ஏற்படாது பார்த்துக்கொள்ளுதல் அவசியமானதாகும்.

இலங்கையில் இன்று நீடிக்கும் சமாதானமும், அமைதியும் சிறிலங்கா அரசிற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான இராணுவச்சமநிலையின் அடிப்படையிலானது என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்றாகும். இச்சமநிலை பாதிக்கப்படும் பட்சத்தில் இலங்கையில் சமாதானம் என்பது கேள்விக் குறியாகிவிடும்.

இவ்விடயமானது கடந்த காலத்தின் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் அடிக்கடி வலியுறுத்தப்பட்டதொன்றாக இருந்தது. இருப்பினும் சிறிலங்கா அரசாங்கம் தனது இராணுவப் பலத்தை அதிகரிப்பதற்கான முயற்சியில் ஈடுபடாமலும் இல்லை. இதற்கென யுத்த நிறுத்த காலத்தில் பெருந்தொகையிலான இராணுவத் தளபாடங்களை அது கொள்வனவு செய்யாமலும் இல்லை. அவ்வாறு இருந்தும் சிறிலங்கா அரசாங்கம் தான் முழு அளவிலான இராணுவ மேலாண்மையைப் பெற்றுக்கொண்டதாக கருதவில்லை. ஆனால் ஆயுதப்படைத்தரப்பு பலம் பெற்றுவிட்டதாக அது கருத்துத் தொடங்கியிருந்தது என்பதும் நிராகரிப்பதற்கு இல்லை.

இந் நிலையில்தான் அண்மைக்காலத்தில் அதாவது சுனாமித் தாக்குதலின் முன்பாக சமாதானப்பேச்சுவார்த்தைகளை குழப்பத்திற்கு உள்ளாக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியிருந்தது. அதாவது யுத்தம் ஒன்று ஏற்படுமானால் புலிகளை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக சிறிலங்கா அரசாங்கம் கருதத் தொடங்கியிருந்தது.

ஆனால் தற்பொழுது சுனாமி பேரழிவால் சமாதான முயற்சிகளும்சரி யுத்த முனைப்புக்களும் சரி ஓரம் தள்ளப்பட்டவையாக, மக்களின் பேரழிவுகள் பேசப்படுபவையாகவும் மாறியிருந்தது. ஆயினும் சிறிலங்கா அரச தரப்பு தனது இனவாதப் போக்கையோ இராணுவ மேலாதிக்கம் குறித்த சிந்தனையையோ கைவிட்டதாகவும் இல்லை. தற்போதைய சூழ்நிலையைப்பயன்படுத்தி சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்ததாகவும் இல்லை.

இந்த நிலையில்தான் பல்வேறு நாட்டுத்துருப்புக்கள் மீட்புப் பணி, புனரமைப்புப் பணி என இலங்கையில் தரையிறங்கியுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை தற்பொழுது தெற்கில் நிலைகொண்டுள்ளதோடு அங்கேயே மீட்பு மற்றும் புனர்வாழ்வுப் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சிறிய அணிகள் மட்டக்களப்பு, திருமலைக்கும் சென்றுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு நிலைகொண்டுள்ள துருப்புக்கள் மனிதாபிமானப்பணிகளை மேற்கொள்வது பொதுவில் பாதிப்பற்ற செயல்களாகும். ஆனால், இத்துருப்புக்கள் அதற்கும் அப்பால் செயற்படமுற்படுமானால் அது இலங்கையில் இன்று நிலவும் சமாதானத்திற்கும், அமைதிக்கும் விரோதமான நடவடிக்கையாக மாறிவிடும்.

அதாவது சிறிலங்கா இராணுவத்தின் புனரமைப்பிற்கோஅன்றி நவீனமயப்படுத்தலுக்கோ இக்குழுக்கள் உதவுமாயின் அவர்கள் இயற்கையால் அழிவுற்ற பிரதேசத்தின் மீட்புப் பணிக்கென வந்து அப்பிரதேசத்தில் மீண்டும் ஒரு போருக்கு வழிசெய்பவர்களாக மாறி விடுபவர்.

ஆகையினால் இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பும் அரசுகளும் சரி, இலங்கைக்கு வந்துள்ள வரவிருக்கும் படையினரும் சரி இலங்கையில் எதிர்காலத்தை தீர்மானம் செய்ய முடியும். அதாவது இலங்கையில் போரா? சமாதானமா? என்பதை தீர்மானிக்கத்தக்கவர்களாக இருக்க முடியும். ஏனெனில் இவர்களில் சிலர் தென்பளித்தாலே போதும் சிறிலங்கா அரசு போருக்குத் தயாராகிவிடும்..

# அனான் வடக்கே வரவேண்டும் எனக் கோரி

# யாழ்.ஐ.நா. செயலகம் முன் போராட்டம்

ஐ.நா.செயலாளர் நாயகம் கொபிஅனான் வடபகுதிக்கு வரவேண்டும் என வலியுறுத்தி யாழ்.மாவட்டம் பொது அமைப்புக்களின் ஒன்றியம் யாழ்.ஐ.நா. அலுவலகம் முன் இன்று அமைதிப்போராட்டம் நடத்தவுள்ளது.

இது தொடர்பாக அவ் ஒன்றியம் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவத்தில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களின் நிலவரங்களை நேரடியாகப் பார்வையிட இலங்கை வந்திருக்கும் ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் நாயகம் கொபி அனான் இன்னமும் வடக்கு நோக்கி வருவதற்கான அறிகுறிகள் தோன்றவில்லை.

மனிதாபிமானப் பணிகளின் உச்ச மட்டப் பிரதிநிதியான கொபி அனான் அவர்கள் வடக்கே வருவார். தமது அவலங்களையும் மனிதாபிமானத் தேவைகளையும் எடுத்துக் கூறி ஆறுதல் பெறலாம் என எண்ணினர். தமிழர் தாயகப் பகுதிகளின் ஆழிப் பேரலை அனர்த்தங்களை மூடிமறைக்கும் முயற்சிகளில் ஆட்சியாளர் ஈடுபட்டுள்ளனர் என்பது தெரிகிறது.

மாண்புமிகு கொபிஅனான் அவர்கள் வடக்கே வரவேண்டும் என்பதும், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிடுவதும் அம் மக்களுக்கு ஆறுதல் கூறி நம்பிக்கையை ஊட்டுவது அனைவரது விருப்பாக விருந்தது. அதே வேளை கொபி அனான் அவர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களைச் சந்தித்து பேசுவதன் ஊடாக தடைப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் தொடங்க வாய்ப்பு ஏற்படும். அதுவே தமிழ் மக்களினுடைய நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளைத் தீர்த்து வைத்து நிரந்தரமான அமைதி ஏற்பட வாய்ப்பு ஏற்படும் என நம்பினர்.

ஐ.நா.வின் செயலாளர் நாயகம் திருகோணமலை சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டதை நாம் வரவேற்கின்றோம். அதே போன்று முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வந்து உண்மை நிலையை அறிய வேண்டும்.

ஐ.நா.செயலாளர் நாயகம் வடக்கே விஜயம் செய்ய வேண்டும் என்ற தமிழ் மக்களின் நியாய பூர்வமான வேண்டுதலை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இன்று காலை 11.00 மணிக்கு கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள யாழ்ப்பாணத்திற்கான ஐ.நாவின் அலுவலகம் முன்பாக அமைதி வழியிலான கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்றை யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியமும், யாழ்ப்பாண மாவட்ட மனிதநேய அமைப்புக்கள் ஒன்றியமும், இணைந்து மேற்கொள்ளவுள்ளது. இப் போராட்டத்தில் மனிதநேய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மேற்படி அமைப்புக்கள் இவ் அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# வடக்கு கிழக்கிற்கு சர்வதேச உதவி தடைப்படின் அரசியல்தலைவர்களுடன் கலந்துரையாடுவேன்

### -வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர்-

சர்வதேச உதவிகள் வடக்கு கிழக்கிற்கு வழங்குவது தடைப்படுமானால் அது தொடர்பாக அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடி பெற்றுத்தர உதவுவோம் இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ் வெவவிமலசாரதேரர் தெரிவித்துள்ளார்.

சுனாமி பேரலை அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்துள்ள மக்களையும், அழிவுற்ற முல்லை நகரையும் வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் உள்ளிட்ட குழுவினர் நேற்றுப் பார்வையிட்டனர். நேற்று மாலை 3.00 மணியளவில் முள்ளியவளை மத்திய கல்லூரியில் உள்ள மக்களைப் பார்வையிட்ட வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ் வெவ விமலசாரதேரர் உள்ளிட்ட பௌத்த பிக்குகள் மற்றும் மதகுருக்கள், சிங்கள மக்கள் அடங்கிய குழுவினர் மக்களுக்கு உதவிப் பொருட்களையும் வழங்கியதோடு சுனாமியால் அழிவுற்ற முல்லை. நகரையும் பார்வையிட்டனர்.

பின்னர் தமது விஜயம் தொடர்பாக கருத்து வெளியிட்ட சியம்பலாகஸ் வெவவிமலசார தேரர் அவர்கள் வடக்கு கிழக்கு என்ற வேறுபாடின்றி அனைத்து மக்களினதும் நலனைக் கருத்திற்கொண்டே பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட்டு எமது அனுதாபத்தைத் தெரிவிக்கவே இங்கு வந்தோம். அத்தோடு எம்மால் இயன்ற உதவிப்பொருட்களையும் வழங்கினோம். நிச்சயமாக சர்வதேசத்தால் வழங்கப்படும் உதவிப்பொருட்கள் இப்பகுதிமக்களையும் வந்தடைய வேண்டும் மாறாக அவைதடை செய்யப்படுமானால் அது தொடர்பாக அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடி அவற்றைப் பெற்றுத்தரவும் உதவுவோம். ஏனெனில் இங்குள்ள மக்கள் அனைவரும் மிகமோசமான பாதிப்பை எதிர்நோக்கியவர்களாகவே காணப்படுகின்றனர் எனவும் அவர் கூறினார். (ச,20)

# நலன்புரி நிலையங்களை இராணுவம் பொறுப்பேற்பது அப்பட்டமான மனித உரிமை மீறும் செயல் ——————

### -நவசம சமாஜக் கட்சி பொதுச் செயலர் வாசுதேவ நாணயக்கார

சுனாமி கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் மக்கள் அகதிகளாக வாழ்ந்து வருகின்ற நிலையினில் அவர்கள் தங்கியுள்ள முகாம்களை இராணுவம் பொறுப்பேற்பது என்பது அப்பட்டமாக அகதிகளது அடிப்படை உரிமைகளை மீறுமோர் செயலெனக் குற்றஞ்சாட்டினார். நவசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் வாசுதேவ நாணயக்கார.

சுனாமி கடற்கொந்தளிப்பினால் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பாக பார்வையிடுவதற்காக வந்திருந்த அவர் முன்னதாக வடமராட்சியின் வதிரிப் பகுதியில் இயங்கி வரும் விசேட செயலணிக் குழுவின் அலுவலகத்திற்கும் வருகை தந்திருந்தார். அங்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகளை சந்தித்து உரையாடிய பின் எமக்களித்த கேள்வியொன்றின் போதே இதனைத் தெரிவித்தார்.

வடகிழக்குப் பகுதிகளில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களைப் படைத்தரப்பு பொறுப்பேற்பதாக அரசு அறிவிப்பை விடுத்துள்ளதே? என எழுப்பப்பட்ட கேள்வியொன்றிற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இது பற்றி மேலும் விபரிக்கையினில் அரச படைகளில் சிங்களவர்களே உள்ளனர். கடந்த கால நிகழ்வுகளின் அடிப்படையினில் அவர்கள் இடம் பெயர்ந்து முகாம்களினில் உள்ள மக்களைத் துன்புறுத்த மாட்டார்களென்ற எந்தவொரு உறுதிப்பாடுமில்லை. ஆனாலும் மனிதாபிமான ரீதியில் படையினரையோ பொலிசாரையோ சேவையில் ஈடுபடுத்த அரசு முற்பட்டால் அவர்கள் ஆயுதங்களை களைந்து விட்டு நிராயுத பாணிகளாக அங்கு கடமையாற்றட்டும் என்றார். மனிதாபிமான உதவி என்ற அடிப்படையில் இந்தியா மற்றும் அமெரிக்கா எனப் பல சர்வதேச நாடுகளினதும் இராணுவங்களும் இங்கு வருகின்றனவே? அது இலங்கையின் இறையாண்மையைப்பாதிக்க மாட்டாதா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் வருகை இங்கு நீண்டகால அடிப்படையில் சிக்கல்களை கட்டாயம் உருவாக்கும் என்றார். அத்துடன் அவ்வாறான அந்நிய நாட்டு இராணுவங்கள் வருகை தந்து இலங்கை இராணுவத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டே செயற்படுகின்றன. தற்போதைய சூழலில் இவ்வாறு ஒரு தரப்பை இராணுவ ரீதியினில் வளப்படுத்துவதும் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றார். இதனிடையே சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகளுக்கு நேரடியாக உதவிகளை வழங்கக் கூடாதென அரசுதடைவிதிக்கின்றதென எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் “தமிழ்ப்பிரதேசங்கள் எங்கும் விடுதலைப்புலிகள், அரச சார்பற்ற அமைப்புகளுடன் தமிழ்சமூகத்துடனும் இணைந்தே புனர்வாழ்வுப்பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். இங்கும் (யாழ்ப்பாணம்) அவ்வாறே செயற்பட்டு வருவதை நேரடியாகக் காணக்கூடியதாக இருக்கின்ற இந் நிலையில் சர்வதேச சமூகம் தனது உதவிகளை விடுதலைப் புலிகளுடன் இணைந்தே செயற்படும், சமூக கட்டமைப்புகள் மூலமும வழங்கலாம் என்றார் அவர். பின்னர் தனது குழுவினர் சகிதம் இன்று கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட வடமராட்சியின கரையோரக் கிராமங்களையும் அவர் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார். (27)

### சுனாமி அனர்த்தத்தின் போது

# காலியில் காணாமல்போன வயோதிபர்

## 13 தினங்களின் பின் உயிருடன் மீட்பு

கடந்த 26ஆம் திகதி இடம் பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் காணாமல்போனதாக தேடப்பட்டு வந்த 70 வயது ஆண் ஒருவர் 13 நாட்களின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

இவர் காலி கராபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு தற்பொழுது பேசக்கூடிய அளவில் உள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேற்படி சம்பவம் மீட்புப்பணி நடைபெற்றுக்கொண்டிருக்கையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது

# இலங்கையரை நாடுகடத்துவது அமெ.வால் தற்காலிக நிறுத்தம்

அமெரிக்க அரசாங்கம் இலங்கையர்களை நாடு கடத்தும் தனது செயற்பாட்டை தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. நாடு கடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டவர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி வரை அமெரிக்காவில் தங்கியிருக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக இலங்கை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கையர்களை திருப்பி அனுப்பும் நடவடிக்கையினை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாகவும், குற்றச் செயல்களோடு சம்பந்தப் படாதவர்கள் தொடர்ந்தும் அமெரிக்காவில் தங்கியிருக்க முடியும் என்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

## சிறிலங்கா...

தரப்புகள் வழங்கும் தகவல்களின் அடிப்படையில் விசமத்தனமாக செய்திகளை ஒலிபரப்பும் கீழ் நிலைக்கு இறங்கியுள்ளமை குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளும், தமிழ்மக்களும் தங்கள் கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவிக்க விரும்புகின்றனர்.

இந்தளவு பாரிய அனர்த்தம் நிகழ்ந்திருக்கும் வேளையில் மக்கள் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தும் விதமான வதந்திகளைப் பரப்பும் பணியில் அரசின் பொறுப்புவாய்ந்த ஊடகம் ஒன்று ஈடுபடுவது வருந்தத்தக்கது. ஏற்பட்டிருக்கும் துன்பியல் நிகழ்வால் மக்கள் பரிதாப நிலைக்குத்தள்ளப்பட்டிருக்கும் சூழ்நிலையிலும் முன்னெடுக்கப்பட்டு வரும் மனிதாபிமான நடவடிக்கைகளின் பின்னணியிலும் செய்தி வெளியிடுவதில் உண்மைத்தன்மை மாத்திரம் அன்றி கவனம், கட்டுப்பாடு மற்றும் ஊடகத்தர்மம் என்பவற்றைப் பேணுவது அவசியமானது.

ஒரு தேசிய அனர்த்தத்தின் காரணமாக மக்கள் அவல நிலையில் இருக்கும் பொழுது அவர்கள் மத்தியில் பதட்டமும், குழப்பமும் ஏற்படாதிருப்பதை உறுதி செய்யும் விதத்தில் தனது ஊடகங்களில் செய்தி வெளியிடப்படுவதை உறுதிசெய்யும் தார்மீகக் கடப்பாடு அரசாங்கத்திற்கு உண்டு. வதந்திகளைப் பரப்புவதற்கும் விசமத்தனமாகப் பிரச்சாரங்களை மேற்கொள்வதற்குமான நேரம் இதுவல்ல என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐ.நா...

அனான் ஏன் அங்கு விஜயம் செய்யவில்லையென்று செய்தியாளர் கேட்டபோது அதற்குப் பதிலளித்த வேளையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தான் ஒரு மனிதாபிமான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருப்பதாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகள் அனைத்திற்கும் விஜயம் செய்யத் தான் ஆவலாகவும், விருப்பமாகவும், இருப்பதாகவும் ஆனால் இலங்கை அரசின் அதிதியாகத் தான் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருப்பதால் இலங்கை அரசே தனது விஜயத்திற்கான நிகழ்ச்சிநிரலை தயாரித்ததாகவும் அவர் கூறியுள்ளார். அதன் பின்னர் பெயர்குறிப்பிட விரும்பாத சில ஐ.நா. அதிகாரிகள் குறித்த செய்தி நிறுவனத்திடம் கருத்துக்கூறுகையில் அனான் ஒரு நிவாரண முயற்சியிலேயே இலங்கை வந்திருக்கின்றாரே தவிர அரசியல் காரணங்களுக்காக அல்ல என்றும் செயலாளர் நாயகம் புலிகளின் பகுதிகளுக்கு விஜயம் செய்ய விரும்புகிறார் என்றும் ஆனால் அது நடக்கவில்லை. அரசாங்கத்தையும் இது தொடர்பில் நம்பவைக்க எடுத்த முயற்சிகள் யாவும் பயனற்றுப் போய் விட்டது என்றும் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 200...

கள் விடுதலை செய்யப்படுவதாக லெபனான் அரசாங்கம் அறிவித்துள்ளது.பயண அனுமதி முடிவடைந்த நிலையில் சட்டவிரோதமாக தங்கியிருந்தமை தொடர்பான குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே பெரும்பாலான இலங்கையர்கள் அங்கு சிறை வைக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது இதேவேளை பயண அனுமதி முடிவடைந்த நிலையில் லெபனானில் தங்கியுள்ள 20,000 இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க லெபனான் தீர்மானித்ளதுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத் தலைவர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

## வீரவணக்கம்...

திருமலை) என்ற போராளியே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றன.

## சர்வ...

மட்டும் தான் போதும். இந்த அணுகுமுறையால் மாற்றம் வேண்டும் எனத் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தந்த கொலின் பவல் மற்றும் கொபி அனான் அவர்களும் இங்கு வருவார்கள் என்று நாங்களும் எங்களுடைய மக்களும் எதிர் பார்த்து நிற்கின்றோம். இங்கு வராமலேயே அவர்களை திரும்பிப் போகின்ற அளவிற்கு இங்கு வந்து இந்தப் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடாமல் செல்கின்ற அளவிற்கு அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்து நகர்த்திக் கொண்டிருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

**நிவாரண உதவி எதிர்பார்த்த அளவிற்கு கிடைக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர்**

பதில்:- சமாதான முன்னெடுப்புக்கள் முன்னெடுக்கப்பட்டால் தான் இலங்கைக்கு உதவிகள் வழங்கப்படும் என்று உலக நாடுகள் சொல்லி வந்தது. சமாதான முன்னெடுப்புக்கள் இல்லாமல் போர்க் கொடி உயர்த்திக் கொண்டிருந்த படியால் உதவிகள் நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் திடீரென ஏற்பட்ட இயற்கையின் அனர்த்தம் காரணமாக மனிதாபிமான ரீதியாக பல உலக நாடுகள் இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக பெருமளவான நிதியை அனுப்பியிருக்கின்றது. ஆனால் இந்த அரசாங்கம் வட கிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு அவைகளை அனுப்பிக் கொண்டிருக்கின்றதே தவிர இங்கு அதை அனுப்புகின்ற நடவடிக்கையை மேற்கொண்டிருந்தால் இன்றைக்கு நாங்கள் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டிருக்கின்ற மக்கள் தற்காலிக கொட்டில்களிலாவது ஆவது குடியமர்த்தப்பட்டிருப்பார்கள் என்றார்.

**கேள்வி:- கொபி அனான் திருகோணமலை விஜயம் குறித்த கேள்விக்குப் பதிலளிக்கையில்**

பதில்:- திருகோணமலையைப் பொறுத்த வரையில் நகர்ப் பகுதி இராணுவத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றது. மற்றும் கிராமங்கள் முழுமையாக எங்களுடைய ஆளுகைக்குள் இருக்கின்றது. வருகின்றவர்கள் எல்லாம் திட்டமிட்ட முறையில் இந்த அரசாங்கத்தால் இருட்டடிப்புச் செய்யப்பட்டு நகர்ப் பகுதிகளைக் காட்டப்பட்டு இதுதான் திருகோணமலை இது தான் மட்டக்களப்பு இது தான் அம்பாறை என்று சொல்லி காட்டிக் கொண்டு அங்கு உதவிகளையும் அரச படையினரைக் கொண்டு தான் அங்கு நிர்வகிக்கின்ற நடவடிக்கைகளையும் இவர்கள் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் எனவும் கூறினார்.

## கொபி...

02)அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், கிளிநொச்சி மாவட்டம்.

03) தேசிய எழுச்சிப் பேரவை, கிளிநொச்சி மாவட்டம்.

04) வலயக்கல்விப் பணிமனை, கிளிநொச்சி.

05) மருத்துவர் சங்கம்,கிளிநொச்சி.

06)வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

07) வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம்.

08) கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம், கிளிநொச்சி மாவட்டம்.

09) மாதர் சங்கங்களின் சமாசம், கிளிநொச்சி மாவட்டம்.

10) வர்த்தக சங்கம், கிளிநொச்சி.

11) பொதுச்சந்தை வர்த்தகர் சங்கம், கிளிநொச்சி.

12) தமிழீழ கலைஞர்களின் ஒன்றியம், கிளிநொச்சி.

13) தொழில் நுட்பக்கல்வி நிறுவகம், கிளிநொச்சி.

14) சுனாமி அகதி முகாம் மக்கள்,

15) முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் , கிளிநொச்சி.

16) அழகக உரிமையாளர் சங்கம், கிளிநொச்சி.

17) சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம், கிளிநொச்சி மாவட்டம்.

18) கிராம அபிவிருத்தி சங்கம், கிருஸ்ணபுரம்.

19) தமிழ் மாணவர் ஒன்றியம், கிளிநொச்சி.

20) தகவல் தொழில்நுட்ப பேரிணையம், கிளிநொச்சி.

போன்றனவற்றுடன் 10 இற்கும் மேற்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் பெண்கள் அமைப்புக்கள் என மகஜர்கள் வழங்கியுள்ளனர்.

## புலிகளின்...

பாட்டுப் பிரதேசங்களுக்குச் சென்று நிவாரணப் பணிகளை மேற்கொண்ட பிறநாட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், போதுமான அளவு நிவாரணப் பொருட்கள் இல்லாது இருப்பினும் விடுதலைப் புலிகள் தங்களிடம் உள்ளவற்றினை நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கும் விதத்தினையும், அவர்களது நிர்வாகத் திறமைகளையும் வியந்தும் பாராட்டியும் உள்ளனர்.

அரசியல் காரணங்களினால் ஆழிப்பேரலையின் அனர்த்தம் ஏற்பட்டதில் இருந்து இரண்டு நாட்களுக்கு சிறிலங்கா அரசாங்கம் எந்தவித நிவாரண நடவடிக்கைகளையும் தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ள முயற்சிக்கவில்லை. தங்களால் எந்தவொரு உதவிகளையும் விரைவாக தமிழர் பிரதேசங்களுக்கு வழங்க முடியவில்லை என்பதனை சிறிலங்கா அரசின் நிவாரணப் பணிகளுக்கு பொறுப்பானவரான நிரஞ்சன் டி சொய்சா ஒப்புக்கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான குறைகளை எதிர்வரும் காலங்களில் தவிர்க்க, தற்போது புலிகளுடனான சந்திப்புக்களை மேற்கொண்டும், அவர்களுடன் இணைந்து நிவாரணப் பணிகளை கண்காணித்தும், பொருட்களை விநியோகித்தும் வருவதாக சிறிலங்கா அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தென்னிலங்கையில் அமெரிக்க, இங்கிலாந்து மற்றும் இந்தியப் படையினர் நிவாரணப் பொருட்களை விநியோகித்தும், காணாமல் போனவர்களையும், இறந்தவர்களின் உடல்களையும் கண்டுபிடிக்கும் முயற்சியிலும், சேதமடைந்த பாலங்களை மீளக்கட்டுவதிலும், வீதிகளை சீரமைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், இப்படியான எந்தவொரு நிவாரணப் பணிகளையும் தமிழர் பிரதேசங்களில் காணமுடியவில்லை.

ஆழிப்பேரலை தமிழீழத்தை தாக்கிய சில நிமிடங்களிலேயே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரையும், விடுதலைப் புலிகளையும் கடற்கரையோரங்களிலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் காணக்கூடியதாக இருந்தது.

சில மணிநேரத்திலேயே விடுதலைப் புலிகள் பல அகதிமுகாம்களை ஏற்படுத்தியது மட்டுமன்றி, தற்போது அவர்கள் பாதிக்கப்பட்ட பல வீதிகளை சீரமைத்தும், நிலைமையினை கட்டுப்பாட்டுக்குள்ளும் வைத்திருக்கின்றனர்.

இதேபோன்று, விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பினை வியந்தும் பாராட்டியும் ஓர் செய்தியினை கடந்த சில தினங்களுக்கு முன்னர் வோஷிங்டன் ரைம்ஸ் (Washington Times) பத்திரிகையில் ஏ.பி (A.P) ஊடக நிருபர் ஆதர் மக்ஸ் என்பவர் எழுதியிருந் ததும், சிறிலங்கா தலைநகர் கொழும்பில் இருந்து வெளிவரும் டெய்லி மிரர் எனும் ஆங்கில பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக் காட்டியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழர்...

அவர் மேலும் கூறுகையில் ;

இவர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்ற சர்வதேச ரீதியாக அங்கீகாரத்தைப் பெற்றுள்ள தொண்டு நிறுவனத்தைக் கொண்டிருக்கின்றார்கள். இந்நிறுவனம் தென்னிலங்கையில் கூட அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்போதுள்ள உண்மையான நிலை என்னவென்றால் அனைத்துத் தொண்டு நிறுவனங்களும் அவர்களினூடாகச் செயற்படுவதன் மூலமே உரிய பலாபலனைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. இந்நிறுவனம் விரைவாக தனது பணிகளைச் செய்யக்கூடியவாறு தென்னிலங்கையில் உள்ள அரச பிரதிநிதிகளினூடாகவும் அரச அதிபர்களினூடாகவும் செயற்படுகிறது. மேலும் ஐ.நா.வின் நிறுவனங்களுடனும் ஏனைய தொண்டு நிறுவனங்களுடனும் இணைந்து பணியாற்றுகிறது.

நான் முன்பு குறிப்பிட்டது போல் இது ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட கட்டமைப்பைக் கொண்டது. அத்தோடு நீண்ட அனுபவ முதிர்ச்சியையும் கொண்டது. இங்குள்ள மக்களைப்பற்றி நன்கு புரிந்து வைத்துள்ளது. பல இலட்சக்கணக்கான மக்கள் பல தடவைகள் உள்நாட்டு யுத்தத்தின் போது இடம் பெயர்ந்திருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் சொல்கிறபடி அவர்களது அனுபவத்தை வைத்துப் பார்க்கும் போது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக உதவிகள் வழங்கப்படுவதே சிறப்பான வழிமுறையாயிருக்கும்.


## பாராட்டுகின்றோம்

**கடந்த 23.12.2004ஆம் திகதி எமது பெறுமதிமிக்க தாலிக்கொடி தவறிவிட்டதாக 24.12.2004 திகதி ஈழநாதம் பத்திரிகையில் வெளியாகியது. இதனை நாச்சிக்குடா காவல்துறையினரின் தீவிர நடவடிக்கையின் நிமிர்த்தம் கண்டெடுத்தவர்களிடம் இருந்து மீட்டெடுத்து எமக்கு ஒப்படைந்துள்ளனர். எனவே இவர்களின் இச் சேவையினையும் மேற்படி பொருள் கிடைப்பதற்கு ஆதாரமாக இருந்தவர்களையும் எமது குடும்பத்தினர் மனப்பூர்வமாக பாராட்டுகின்றோம்.**

தகவல்:

**செ.பத்மநாதன் குடும்பம்,**
**முழங்காவில்.** (5338)



## நன்றி அறிவித்தல்

அண்மையில் நடைபெற்ற இயற்கை அனர்த்தத்தின் போது எனது தகவல்கள் அறிவதற்கு எனது மனைவிக்கு உதவிகள் செய்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துப் பிரிவினர்களுக்கும், புலிகளின் குரல் வானொலிக்கும் ஈழநாதம் பத்திரிகைக்கும், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

*முருகேசு குமாரகுலசிங்கம்,*
*184/1 அதிசய விநாயகர் ஆலயவீதி,*
*விசுவமடுமேற்கு.* (5539)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.